# ஆனையை அடக்கிய அரசாங்கம்

செ.மெற்றாஸ்மயில், B.A.Hons.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J / URUMPIRAI SANDROTHAYA VITHIYASA!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனையை அடக்கிய அரியாத்தை

"வேலப்பணிக்கன் பெண்சாதி
அரியாத்தை மேல் ஒப்பாரி"
- வரலாற்று ஆய்வு

நூலாசிரியர்
செல்லையா மெற்றாஸ்மயில்
பீ. ஏ. சிறப்பு

வெளியீடு :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவணைத்து, அன்பூட்டி அறிவூட்டிய
அமரர்
அன்னை திருமதி செல்லையா
இரத்தினபூவதி

அவர்களுக்கு

சமர்ப்பணம்

நூல் : ஆனையை அடக்கிய அரியாத்தை
ANAIYAI ADAKKIA ARIYAATHAI
"வேலப்பணிகன் பெண்சாதி அரியாத்தை மேல் ஒப்பாரி" - வரலாற்று ஆய்வு
"A Dirge About Ariyaathai, wife of Velappnikan" - An Historical Analysis

முதற்பதிப்பு: 1995 ஐப்பசி

உரிமை: ஆசிரியருக்கு.

வெளியீடு: பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம், 365. கோவில்வீதி. நல்லூர், இலங்கை

அச்சிட்டோர்: 'மணி ஓசை'
12, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

முகப்போவியம்: 'ரமணி'

பக்கங்கள்: 99

விலை
Price } 65 =

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
அவர்களின்

# வாழ்த்துரை

'ஆனையை அடக்கிய அரியாத்தை'
எனும் நூலின் ஆசிரியர்
திரு. செல்லையா மெற்றாஸ் மயில் அவர்கள்,
புவியியல் சிறப்பு பட்டதாரி.
இவர் இயல்பாகவே தமிழ் நாடகம், கூத்து,
நாட்டார் வழக்கியல் ஆகியவற்றில்
மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.
வன்னிப் பிரதேச மக்களின் வாழ்வும்,
வளமும் பற்றிய பல உண்மைகளை
வெளிக் கொணர வேண்டும் என்ற
தாகத்தில் பல இலக்கிய ஆய்வுகளை
மேற்கொண்டு வருபவர்.
வன்னிப் பிரதேசம் பற்றிய
பல எழுத்தாக்கங்களைச் செய்துள்ளார்.
அப்பிரதேசம பற்றிய நாட்டார் பாடல்கள்
பலவற்றைத் திரட்டித் தொகுத்து
இது வரை காலமும் மக்களால் அறியப்படாத
பல விடயங்களை வெளிக்கொணர
எடுத்த முயற்சியின் விளைவில் ஒன்றே
'ஆனையை அடக்கிய அரியாத்தை'
எனும் நூலாகும்.

வேலப்பணிக்கன் ஒப்பாரியில் வரும் பெண்
துணிவும், வீரமும், கற்பும்
நிறைந்து விளங்குகிறாள்.
பயங்கர கோலத்தை உடைய யானை
அவளை எதிர்த்து வந்த போதும் துணிவுடன்
அதனை அடக்கிக் கட்டுகிறாள்.
ஆண்களையெல்லாம் தலை குனியச் செய்கின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளின் துணிவும் வீரமும்
பெண்ணினத்திற்கே பெருமை சேர்ப்பதாக உள்ளது.
அகப்பை பிடிக்கும்கை
ஆனையையும் அடக்கும்
என உணர்த்தும் நூலாசிரியர்
காலத்தின் தேவையை உணர்ந்து
வீராங்கனை அரியாத்தையின்
வரலாற்றை நூல் வடிவில் வெளியிட்டிருப்பது
அவசியமும் அவசரமுமான ஒரு செயற்பாடாகும்.

கர்ன பரம்பரைக் கதைகள்
காலவோட்டத்தில் திரிபு படுத்தப்பட்டாலும்
அவற்றில் பல உண்மைகள் உள்ளன
என்பதை ஆய்வுகள் குறிக்கின்றன.
எனவே இக்கதைகளைத் திரட்டித்
தொகுத்து ஆவணப்படுத்த வேண்டும்.
இவ் ஆவணங்களில் ஆய்வுகளை
மேற் கொள்ளுவதன் மூலம்
மறைந்திருக்கும் பல உண்மைகளை
உலகறியச் செய்யலாம்.
இம் முயற்சிகளில்
திரு. செ. மெற்றாஸ் மயில் அவர்களின்
முயற்சியும், பங்களிப்பும்
பாராட்டப்பட வேண்டியதே.
நாட்டார் பாடல்களிலிருந்து
கிராமிய மக்களின் வாழ்க்கை
அவர்களின் சமூக பழக்க வழக்கங்கள்,
பண்பாடு, பாரம்பரியம்
என்பவற்றை வெளிக்கொணரும்
அவரின் முயற்சி மேலும் தொடர்ந்து
நற்பேறுகளைக் கொண்டு வரவேண்டும்
என்பதே எமது பெருவிருப்பாகும்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர்
பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின்

# அணிந்துரை

ஈழத்தின் முதல் தமிழ் வீர மகள்
அரியாத்தை என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
வேலப்பணிக்கன் ஒப்பாரி
எனும் நாட்டார் இலக்கியத்தின்
தலைவிதான் அரியாத்தை.
எவருமே பிடிக்க முடியாத யானையை
அடக்கிப் பிடித்துக்கொண்டு வந்த
ஒரு பெண் அவள்.
அத்தகைய பெண்ணினுடைய வரலாறு
இன்று எண்ணப்பட வேண்டியது.
இந்த வகையில்
வேலப்பணிக்கன் ஒப்பாரி நூலையும்
ஏனைய வரலாற்றுத் தரவுகளையும்
அடிப்படையாகக் கொண்டு
அரியாத்தை எனும் தமிழ் வீரப்பெண்ணின்
வரலாற்றை எழுதியுள்ள
திரு. செல்லையா மெற்றாஸ் மயில்
அவர்களின் முயற்சி பாராட்டுக்குரியதாகும்.

வன்னியருடைய வீரத்தைப்பற்றிக்
கூறும் ஆசிரியர்,
பண்டார வன்னியனுக்கு முன்பிருந்து ஆட்சி செய்த
சின்னவன்னியனுடைய
காலத்தைச் சேர்ந்தவள் அரியாத்தை
என்பதை வலியுறுத்துகின்றார்.
அரியாத்தையினுடைய எதிர்பாராத சாவு
பற்றியும் ஆசிரியர் கருத்துக் கூறுகின்றார்.
தாங்கள் அடக்காத யானையை
ஒரு பெண் அடக்கி விட்டாளே என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய ஆண் இனத்தவர்
இவளை நஞ்சூட்டிக் கொலை செய்தனர்
என்றொரு செவிவழிக் கதை உண்டு.
இக்கதைக்கு வேலப்பணிக்கர் ஒப்பாரி
நூலிலே சான்று இல்லை என
ஆசிரியர் கூறுகின்றார்.
செவிவழிக் கதையையும்
நாம் எளிதிலே தள்ளி விடவும்
முடியாது என்பதை
வரலாற்று ஆசிரியர் அறிவர்.

வேலப்பணிக்கன் ஒப்பாரியிலே
புலப்படுத்தப்படும் சமூக பண்பாட்டுச்
செய்திகள் பற்றி ஆசிரியர்
விரிவாகக் கூறியுள்ளார்.
இவ்வாறு பல சுவையான பயன்பாடுள்ள
கருத்துக்களும், செய்திகளும்
இந்நூலிலே தரப்பட்டுள்ளன.

எம்முடைய வரலாற்றை அடிக்கடி
பின்னோக்கி பார்க்கின்ற ஒரு காலத்திலே
நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்
இன்றைய வீரத்தின் விளைநிலம்
எப்படிப்பட்டது என்பதை
நோக்குவதும் பொருத்தமானதே.
எனவே இப்பின்னணியிலே
திரு. மெற்றாஸ் மயிலுடைய இந்நூல்
காலத்தின் தேவை கருதி வெளிவருவதொன்றாகும்.
இந்நூலை எழுதி வெளியிடும்
ஆசிரியருக்கு என்னுடைய வாழ்த்துக்களையும்,
பாராட்டுக்களையும் கூறுகின்றேன்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர்
பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின்

# முன்னுரை

## வரலாறு ஆகும் நாட்டார் வழக்காற்றியல்

> "வேலப்பணிக்கன் பெண்சாதி அரியாத்தை மேல் ஒப்பாரி" என்னும் நாட்டார் பாடல் பற்றிய ஆய்வான "ஆனையை அடக்கிய அரியாத்தை" எனும் இந்நூல் பற்றிய ஒருகுறிப்பு.

அண்மைக்காலத்தில் வன்னிப் பிரதேச வரலாற்றுணர்வில் முக்கிய இடம் பெற்று வரும் ஒரு பெண் பற்றிய நூல் இது.

ஆண்களால் அடக்க முடியாதென்று கருதப்பட்ட ஒரு கொம்பன் யானையை அடக்கிய அரியாத்தை என்ற பணிக்கர் குலப் பெண்ணொருத்தியின் கதை இது. அவளை 'வேலப்பணிக்கன் என்பவனுடைய பெண்சாதி' என்றே இந்தக் கதைப் பாடல் குறிப்பிடுகின்றது அரியாத்தை கதையின் மூலம் நாட்டாரியல் கதைப்பாடலே.

அரியான் பொய்கை செல்லத்துரை என்பவர் இந்தக் கதையை விரித்து ஒரு "முழு நீளக்" கதையாக எழுதியுள்ளாரென அறிகிறேன். அந்த விரிவாக்கப்பட்ட கதையை அடிப்படையாகக் கொண்டு அதே தலைப்பில் (வேழம்படுத்த வீராங்கனை) தீரு. அருணா செல்லத்துரை எனும் நாடகக் கலைஞர் ஓர் வீடியோத் தயாரிப்பை வெளியிட்டுள்ளார். இப்பொழுது முல்லைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவின் நாட்டார் வழக்காற்றியலில் ஆர்வம் கொண்ட திரு. மெற்றாஸ் மயில் அந்த மூலப்பாடலினை மையமாகக் கொண்டு வன்னி வரலாற்றுப் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் பார்க்க முனைந்துள்ளார்.

பெண்கள் போராளிகளாக முகிழ்த்துக் கிளம்பும் இக்காலகட்டத்தில் போராட்டம் மிக உக்கிரமாக ஆடப் பெறும் வன்னிப்பிரதேசத்தில் அரியாத்தை என்ற இவ் வரலாற்றுப் பாத்திரம் மீள் கண்டுபிடிப்புச் செய்யப் படுவது ஆச்சரியமில்லை. பெண் போராளிகளுக்கு வழங்கப் பெறும் அதே சொல்லே (வீராங்கனை) இங்கு அரியாத்தைக்கும் சூட்டப்படுகின்றமை ஒரு தற் செயல் நிகழ்ச்சியன்று இத்தகைய வரலாற்று மீள் கண்டுபிடிப்புகள் நடைபெறுவது வரலாற்றில் அடிக்கடி நிகழும் ஒரு விடயமாகும். உதாரணமாக இந்திய சுதந்திரப் போற்றின் பின்னர் இந்திய சுதந்திரத்துக்கான போராட்டத்தின் நதி மூலங்களைத் தேடியபொழுது தென்னிந்திய வீரர்களின் பெயர்கள் சில முக்கியப் படுத்தப்பட்டன. அவர்களில் ஒருவனே கட்டபொம்மநாயக்கன். அவன் விரபாண்டிய கட்டபொம்மனாக்கப் பட்டான்.

அரியாத்தையின் ''கதை'' இதுவரை நாட்டார் நிலையிலேயே பேணப்பட்டு வந்துள்ளது. முல்லைத் தீவுப் பகுதி மக்களின் செவி வழிக் கதை மரபில் இது எந்த வடிவில் வழங்கப்படுகிறதென்பது எனக்குத் தெரியவில்லை ஆனால் இதுபற்றிய நாட்டார் வழக்காற்றியற் பேணுகை ''வேலப்பணிக்கன் பெண்சாதி அரியாத்தைமேல் ஒப்பாரி''என்ற ஒப்பாரி முறைக்கதைப் பாடல் வழியாகக் காணப்படுகிறது. ஒன்றுக்கொன்று வேறுபட்ட பாடங்களைக் கொண்ட இரு பாடங்கள் இன்று உள்ளன. திரு. மெற்றாஸ்மயில் 1980 இல் பதிப்பித்துள்ளது ''வன்னிவள நாட்டுப்பாடல்கள்'' தொகுதியில் இப்பாடலின் இரண்டு பிரதிகளும் ஒப்பிடப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசுரிக்கப்பட்டுள்ளன. ஒபீப்பட்டினைப் பேராசிரியர் சண்முகதாசும் எங்கள் மாணவி திருமதி குணலட்சுமி யும் செய்திருந்தனர். அந்தப்பிரதிகளில் ஒன்று கர வெட்டியைச் சேர்ந்தது. கரவெட்டி கிடிக்கினைச்சேர்ந்த வ. கணவதிப்பிள்ளை பதிப்பித்தது. (1934)

அரியாத்தை பற்றிய அடிப்படைக் கதை எளிமை யான சிக்கலற்ற ஒன்று அதனை இந்நூலில் கர்ண பரம்பரைக் கதையில் அரியாத்தை என்ற பகுதியிலே (பக் 20) கண்டு கொள்ளலாம். அரியான் பொய்கை செல்லத்துரையின் கதைப்பின்னலிற் காணப்படும் புதுச் சேர்க்கைகள் ஒப்பாரிப் பாடல்களிற் காணப்படும் அமைப்பிலிருந்து வேறுபட்டவையாகவுள்ளன. உதார ணமாக "அரியாத்தையே யானையை அடக்கவேண் டும்" என்று கூறுவது யாரென்பது ஒப்பாரிப் பாடல் களில் இல்லை.

நாட்டார் பாடலுக்குரிய பாடம் ஒன்றினைத் தள மாகக் கொண்டு அதிற் குறிக்கப்படும் யாவற்றையும் வரலாறு என்று கொள்வதிற் சிக்கலுண்டு. நாட்டார் கதைப்பாடல்கள் அடிநிலை வரலாற்றுப் பாரம்பரியம் ஒன்றின் வெளிப்பாடே என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அடிநிலைப்பாரம்பரியத்தில் அவ்வரலாற்றுத் தரவுபேணப் படுவதற்கும் அது வரண்முறையான வரலாறாக ஏற் றுக்கொள்ளப்பட்டமைக்கும் சில அடிப்படையான கார ணங்கள் இருத்தல் வேண்டும். நாம் அவை பற்றிச் சிந்தித்தல் வேண்டும்.

அரியாத்தை கதையை முக்கியமான அடிநிலைப் பாரம்பரியம் என்று ஏற்றுக்கொள்ளும் அதேவேளை யில், அவள் கதையை கூறும் ஒப்பாரி அளவிலான கதைப் பாடலை ஒரு கல்வெட்டுக்குக் கொடுக்கும் கண தியுடன் நோக்கல் கூடாது. பாடத்தில் வரும் குறிப் புக்கள் எவை எவை வரலாற்றுப் பொருத்தமுடையன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவை பொருத்தமற்றவை என்பதை நோக்கல் வேண்டும்.

உதாரணமாக 107 வது கண்ணியில் வரும்

வாயும் வறளுதிப்போ
வல்லிபுர மாயோனே
நல்லநகர் வேலோனே – என்னுடைய
வாணாள் உருகுதிப்போ.

வல்லிபுரக் கோயில், நல்லூர் ஆகியன பற்றிய குறிப்பைக் கொண்டு வன்னிப் பகுதிப் பண்பாட்டில் வடமராட்சியிலுள்ள வலலிபுரக் கோயிலும் யாழ்ப்பாணப்பட்டினத்திலுள்ள நல்லூர்க் கோயிலும் முக்கியமானவை எனக் கொள்ள முடியுமா என்பது சிக்கலான ஒரு நிலையே.

ஆனால் அதே வேளையில் 90 வது கண்ணியில் வரும் உலாந்தேசர் (டச்சுக்காரர்) பற்றிய குறிப்பு முக்கியமானது.

உலாந்தா மறியல் என்றால்
என் ஆசை அவுறுகமே
என் ஆசை மச்சாள் தோழியரே – நானும்
கூடவே தானிருப்பேன்.

யானையைக் கொண்டுவந்து தன்னைக் காத்தருள வேண்டுமென்று கூறும் அரியாத்தையை நோக்கிச் சொல்லும் பாடல் இது ''உலாந்தா'' என்பது ஒல்லாந்துக்காரன். அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய தீறை கொடுக்கப்படாதவிடத்து ஏதோ ஒரு வகை மறியல் தண்டனை (அல்லது அத்தகைய தண்டனை பற்றிய ஒரு பயம்) இருத்தீருந்தல் வேண்டும். உலாந்தா மறியல் அதனைக் குறிப்பதாகக் கொள்ளவேண்டும்.

இந்தக்கதை இப்பொழுது இருக்கின்ற நிலையில் ஒல்லாந்தருக்குத் தீறையாகக் கொடுப்பதற்கான யானைகளைப் பிடிப்பது பற்றிய ஒரு கதையாகவே இருத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ஒல்லாந்து ஆட்சியாளர் யானைத் தீறை பற்றி எத்துணை விரிவான தகவல்கள் வைத்திருந்தனர் என்பது நூலசிரியர் தரவு வழியாகவே தெரிய வருகின்றது.

காட்டிலுள்ள யானைகளைப் பிடித்து அவற்றைப் பழக்கி எடுத்து விற்பதற்கு பக்ணிகர் என்ற சாதியினர் பயன்படுத்தப்பட்டுள்ளனர். பணிக்கர் என ஒரு குலம் மலையாளத்தில் உண்டு. பிடித்த யானைகளை வியாபார நோக்கமாக கப்பலில் ஏற்றி அனுப்பும் வழக்கம் இருந்ததென்டர். அந்த யானை வணிகம் காரணமாகவே யாழ்குடா நாட்டில், ''ஆனையிறவு'' முதல் ''ஆனைக் கோட்டை'' வரை யானையோடு தொடர்புடைய பல இடப்பெயர்கள் உள்ளன. ''ஆனைவிழுந்தான்'' என்ற பெயருடன் கிராமங்களில் இடங்கள் இருந்தன.

இந்த ஒப்பாரியிற் பேசப்படும் பணிக்கர்கள் யானையை அடக்கி பிடித்து வந்து கொடுப்பார்கள் என்பது நூற்பாடத்திலிருந்து தெட்டத்தெளிவாகின்றது. யானைகள் ஏற்படுத்தும் அழிவுகளிலிருந்து மக்களைக் காப்பாற்ற உதவுவதாக இவர்கள் யானைகளைப் பிடித்தனர் என்று சொல்ல முடியாது. யானையைப் பிடிக்கும் முறைமைகள் யாவும் நன்கு எடுத்துப் பேசப்படுகின்றன (54 ம் கண்ணி முதல்) அரியாத்தை தான் சாவதற்கு முன்னும் கட்டப்பட்ட யானை கையேற்கப் பட்டாயிற்றா என்றே கேட்கிறாள். (141. முதல்)

இந்தப் பாடலில் சின்ன வண்ணியனார் மனைவிக்கும் அரியாத்தைக்குமுள்ள உறவு அரசிக்கும் பிரசைக்குமுள்ள உறவன்று. சின்ன அரியாத்தையின் கூற்றாக வரும் பாடல்களில் ''மச்சான்'' அரியாத்தை என்ற குறிப்பே வருகின்றது. (74 - 88 - 90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் குறிப்புகள் இன்னொரு முக்கிய பிரச்சினையைக் கிளப்புகின்றது. வன்னிமைகளை எந்த அளவுக்கு ''அரசுகள்'' என்று கொள்ளலாம்? அரசு என்று சொல்லப்படத்தக்க நிறுவன அமைப்பு வன்னிமைகளின் ஆட்சி அதிகாரத்தில் நிலவியதெனக் கொள்ளலாமா? பிரதானிகளின் ஆட்சி அதிகாரத்தை எந்த அளவுக்கு அரசு என்று கூறலாம் என்பது போன்ற வினாக்கள் பல உள்ளன.

இந்த நிலையிலேயே இலங்கையில் வன்னிமைகளில் உருவாக்கம்பற்றிய திட்ட வட்டமான ஆய்வு வேண்டப்படுகின்றது. சிங்கள வன்னி தமிழ் வன்னிப் பிரதேசங்களிடையே இருந்த தொடர்ச்சிகள் வேறுபாடுகள் என்பன ஆராயப்படுவது மாத்திரமல்லாமல், தமிழ் நாட்டில் வன்னியர் குலத்துக்கு (முக்குலத்தோர் பாரம்பரியத்துக்கும்) இலங்கையின் வன்னிமைகளுக்கு முள்ள உறவும் ஆராயப்பட வேண்டுவதும் அவசியமாகின்றது.

அரியாத்தைபற்றிய ஆய்வில் பெண்ணிலைவாதக் கண்ணோட்டத்தையும் கருத்திற் கொள்ளல் அவசியமாகும். (அருணா செல்லத்துரையின் ஒளிப்பேளை வெளியிட்டையொட்டி திருவாட்டி செல்வி திருச்சந்திரன் இந்தப் பிரச்சனையைக் கிளப்பியிருந்தார்).

கற்புள்ளவள்என்ற காரணத்தினாலேயேஅரியாத்தை யானையை அடக்கினாள் என்பது ஆண் முதன்மை வாதத்தில் ஒரு வெளிப்பாடேயாகும். தனதுகணவனாற் செய்ய முடியாததை மனைவி அவன்பாற் கொண்டிருந்த கற்புணர்வு காரணமாகவே செய்து முடித்தாள் என்பது பெண்ணின் வலிமையைக் குறைத்து மதிப்பிடும் முயற்சியே என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது. அதிர்ஷ்டவசமாக அரியான் பொய்கை செல்லத்துரை தரும் கதையிற் காணப்படும் ஆண் மேன்மை வாத உள்ளீடுகள் நாட்டார் பாடல் நிலையில் காணப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாத்தை ஏன் இறக்க வேண்டுமென்பதற்கான தடயம் இந்நாட்டார் பாடலில் இல்லை. யானை கட்டி வந்த பின்னர் ஏற்படும் சகுனங்களைக் ( 96 - 98 ) கண்டதும் தான் இறக்க போவதாக அவள் கருதுகிறாள். இறுதியில் அவள் இறக்கும்பொழுது. பாந்தவ்வயமுள்ள ஒரு மனைவியாகவே இறக்கின்றாள். வேலப்பணிக்கன் கட்டுகளை அறுத்துக்கொண்டு வந்து உடன்கட்டை எறும் பொழுதும் அவளின் பிணம் எழும்பிக் கையை நீட்டிற்று என்று கூறப்படுகின்றது.

அரியாத்தை இறப்பது ஏன் இக்கதைக்கு அவசியமாகிறது எனும் வினாவை எழுப்பும் பொழுது பெண்ணிலைவாதிகள் கிளப்பும் வினாக்கள் நியாயமானவையாகவே படுகின்றன.

கணவனை மனைவி விளிக்கும்பொழுது ''நயிந்தை'' என்று அழைப்பது சுவாரசியமான ஒரு பிரயோகமாகும். (150 - 160) கணவன் ' நாயகி'' (181 - 186) என மனைவி நயிந்தை என்கிறாள். நயிந்தை எனும் பிரயோகம் நிலப் பிரபுத்துவ சமுகத்தில் அடிநில மக்கள் நிலமுடையோரை அழைக்கப் பயன்படுத்தப்படுவதாகும்.

சின்ன வன்னியனார் மனைவியைக் குறிப்பிடும் பொழுது ''நாச்சன்'' என்றசொற் பிரயோகம் வருகிறது. (74) அச்சொல் அரியாத்தையையும் குறிக்கவும் பயன் படுகிறது (84 . உயர்நிலைப் பெண்கள் அடிநில மக்களால் நாச்சியார் என அழைக்கப்படுவது மரபு. நாச்சன் எனும் வழக்கம் உண்டு. நாச்சியார், பெயருக்குப் பின்னடையாகவும். நாச்சன் முன்னடையாகவும் வருவதுண்டு. இங்கு பின்னடையாக வருகிறது. இவ்வழக்கு வடமராட்சியில் உண்டு.

இப்பாடலில் வரும் சொற் பிரயோகங்களில் முக்கியமான ஒன்று ''அவுறகம்'' என்பதாகும். இதன் மூல வடிவம் என்ன என்பது தெரியவில்லை அருமைபெரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையாக பார்க்கப்படும் ஒருவர் என்ற கருத்தில் இச் சொல் கரவெட்டியில் வழக்கில் இருந்து வந்தது. (''அவ என்ன பெரிய அவுறகமோ)

ஒப்பாரி முறைமையாக கதைசொல்லும் முறைமை ஒன்றுண்டு. கண்டியரசன் ஒப்பாரி அதற்கு உதாரணம் சோகம் நிரம்பிய கதைகளைக் கூறுவதற்கு இது ஒரு நல்ல அமைப்பாகும். ஏனெனில் ஒப்பாரி இறந்தவரை மையமாகக் கொண்டு தனது மனநிலைகளைக் ''எடுத் துரைப்புச்செய்யும் (Narrate) ஒரு முறைமையாகும்.

தீரு மெற்றாஸ்மயிலின் இந்த முயற்சி இந்தப் பாடலை மேலும் பிரபல்யப்படுத்த உதவும்.

நாட்டார் பாரம்பரியத்தின் ஒரு முக்கியத்துவம் அது அடிநிலை வரலாறுதனைப் பேனுவதாகும். மக்க ளால் மறக்கமுடியாத ஒரு பெண்ணையும். அவள் தீற னையும் பற்றி அடிநிலை மக்கள் தங்கள் கருத்து நிலை களுக்கேற்ப நினைவுகூறும் முறைமை இந்த ஒப்பாரி யில் பாடலாய் தெரிய வருகின்றது. வரலாறு என்பது மேலிருந்து கீழே வருவன மாத்திரமன்று. அடிநிலையிற் பேணப்படுவனவும் வரன் முறையான வரலாற்றினுள் இடம்பெற வேண்டும். உரிய முறையில் இணைக்கப் பட வேண்டும்.

25. 07. 1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கை ஆழியான் அவர்களின்

# அணிந்துரை

நண்பர் செல்லையா மெற்றாஸ்மயில் 'ஆனையை அடக்கிய அரியாத்தை' என்ற இந்த நூலினைப் படிக்கும் போது, அவர் அழிந்து செல்லும் மரபுவழி இலக்கியங்கள், கலைகள், வரலாற்று ஆவணங்கள் என்பவற்றைப் பேணிக் காக்கின்ற பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளமை அறியமுடிகின்றது. 1980இல் வன்னிப்பிரதேசத்தில் வாய்வழியாகவும் சிதிலமான ஏடுகளிலும் இருந்த நாட்டார் பாடல்களைச் சேகரித்து ஒழுங்குபடுத்தி, தொகுத்து ''வன்னிவள நாட்டுப்பாடல்'' என்று நூலுருவில் வெளியிட்டு இருந்தார். அந்த நூலினைத் தொகுக்க அவரெடுத்துக் கொண்ட பெரும் பணிச்சுமையை நோக்கியபோது நமது நாட்டார் வழக்கியல் என்றும் தமிழ் கூறும் நல்லுலகத்தில் அழியாது நிலைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அந்த நம்பிக்கையை இந்த நூல் மீண்டும் உறுதிப்படுத்துகின்றது. மெற்றாஸ்மயில் நாட்டார் வழக்கியலுக்கு ஆற்றுகின்ற பணிபோற்றுதற்குரியது. நமது பழம் பெருமையை நினைந்து இறும்பூதெய்த வைக்கின்றது.

மெற்றாஸ்மயில் அவர்கள் வெளிவாரியாகக் கற்று வெளிவந்த முதலாவது புவியியற் சிறப்புப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டதாரி ஆவார். பிரதேசப் பௌதிக, பண்பாட்டு கற்றல் தந்த தெளிவும், ஞானமும் அவரை நாட்டார் வழக்கியலில் பெரும் ஈடுபாடு கொள்ள வைத்துள்ளது. என்பதை விட அவர் பிறந்து வாழ்ந்த சூழல் இத்துறையில் இரத்தத்தோடு ஊறிய செயற்பாடாக அவரை இயக்கி வருகின்றது, என்பதே மிகப் பொருத்தம். முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பின் 1945இல் பிறந்த மெற்றாஸ்மயில் அப்பிரதேச நாட்டுக் கூத்துகளையும் கலை மரபுகளையும் தெரியாதவராக வளர்ந்திருக்க முடியாது. தனது பத்தொன்பதாவது வயதிலேயே புதுக்குடியிருப்பு சமூக கலாச்சார முன்னேற்றக் கழகத்தின் கலைவராக விளங்கி. பல நாடகப் போட்டிகளை நடாத்தி நாட்டார் வழக்கியலிற்குப் புத்துயிர் வழங்கும் முயற்சியிலீடுபட்டுள்ளார்.

இவர் சாதாரண மக்களிடையே ஊடாடி வருபவர். மண்ணில் புரள்கின்ற மக்களின் துயரங்களைப் புரிந்து கொண்டவர். அதனால் கலைக்கு அப்பால் 1967களில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தில் சேர்ந்துஉதவிச் செயலாளராகவும். யாழ் மலையகப் பிரதிநிதியாக விளங்கி தன்னை ஒரு தொழிற்சங்கவாதியென இனம் காட்டியுள்ளார். மக்களோடான அடிமட்ட இணைப்பு அவரை மக்களின் கலைகளை ஐயமறப்புரிந்து கொள்ள வைத்துள்ளது எனக் கருதுகின்றேன். அவர் செல்கின்ற இடமெல்லாம் நாட்டார் கலைகளையும் தன்னையும் இனங்காட்டிக் கொள்கின்ற திறனை வியக்காதிருக்க முடியாது. 1975 - 77களில் மலையகத்தில் கடமையாற்றிய போது கண்டியில் முத்தமிழ் விழாக்கலை பலதடவைகள். நடாத்தியுள்ளார். இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டில் கல்வித் திணைக்களப் பதவிநிலை உத்தியோகத்தராகக் கடமையாற்றி வருகின்ற வேளையில் நாட்டுக் கூத்துக்களை மேடையேற்றி அத்துறைக்குப் புத்துயிர் அளித்து வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர் மெற்றாஸ்மயில் நல்லதோர் எழுத்தாளர். கடந்த பலவருடங்களாக நாட்டார் வழக்கியல் சம்பந்தமான நூற்றுக் கணக்கான கட்டுரைகளைப் பல்வேறு ஆராய்ச்சிச் சஞ்சிகைகளிலும் எழுதி வருகின்றார். பிரதேசக் கூத்து மரபினைப் பேணுவதற்காக முலத்தை முளிபடாது சுருக்கியும், அழுத்தியும் இவரால் மேடையேற்றப்பட்ட நாட்டுக்கூத்துக்கள் இவரை ஈழமக்கள் ஆழமாகப் பார்க்க வைத்துள்ளன. இவர் ஒரு சிறந்த நாட்டுக்கூத்து நடிகர் என்பதும் அவர் அண்மைக்காலத்தில் மேடையேற்றிய கூத்துக்களிலிருந்து புலனாகின்றது. மேடையாட்ட முறைகளை மரபுபிறழாது அவர் ஆடி வருகின்றமை நமது முன்னைய மரபின் பேணலில் இவருக்குள்ள ஆர்வத்தைக் காட்டுகின்றது. தயாரிப்பாளர், அண்ணாவியார், நடிகர் என இவர் பல்துறை விற்பன்னராக நாட்டார் வழக்கியலில் விளங்கி வருகின்றார்.

அழிந்து செல்லும் மரபுவழி இலக்கியங்களையும், கலைகளையும் பேணுகின்ற முயற்சியில் அனபர் மெற்றாஸ்மயில் தமிழுலகிற்குப் பெரும் தொண்டாற்றியுள்ளார். அவர் முயற்சிகள் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

செங்கை ஆழியான்
(கலாநிதி. க. குணராசா)

பிரதேச செயலாளர்,
யாழ்ப்பாணம்.
01 - 09 - 1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

க. சொக்கலிங்கம் எம் ஏ. (சொக்கன்)
(போசகர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம்)

பழந்தமிழ் பனுவல்களாகிய சங்கநூல்களிலே வீரத் தாய்மார் பற்றிய செய்திகள் சில வருகின்றன. அவர்கள் போர்க்காலங்களிலே தம் கணவரை உடன்பிறந்தோரை மக்களையெல்லம் முகமலர்ச்சியோடு பெருமிதத்தோடும் போருக்கு அனுப்பிவைத்தார்கள். போர்க் களத்திலே பகைவருக்கு புறமுதுகிட்டு ஓடி முதுகிலே காயம்பட்டிறந்தான் தன்மகன் என்று கேள்வியுற்ற 'தாய் ஒருத்தி' ''அவன் அவ்வாறு இறந்திருந்தால் அவனுக்கு பால் அளித்த என் முலையையே அரிந்தெறிவேன்'' என்று சூளுரைத்து, கையிலே வாள்தாங்கிக் களம் சென்று, மகன் மார்பிலே காயம் பட்டிறந்துகிடந்தமை கண்டு ''அவனைப் பெற்றபொழுதிலும் பெருமகிழ்ச்சி அடைந்தாள்'' என்னும் செய்தி அக்கால வீரர்களின் மான உணர்வை எமக்கு காட்டுவதாய் உள்ளது. இதுபோன்ற செய்திகள் காலத்தால் சாகாதவை தமிழினம் தளர்ச்சியறும் காலங்களிலே அவற்றிலே, புதுக்குருதி பாய்ச்சிப் புத்தெழுச்சி அளிக்கவல்லவை என்பதற்கு ஐயம் இல்லை. பவளக்கொடி கதையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிளையாடற் புராணம் கூறும் தடாதகைப் பிராட்டி கதையும் பெண்கள் களம் சென்று போர் நிகழ்த்தியதாகக் கூறுகின்றன ஆனால் இவை கற்பனை நிகழ்வுகளேயன்றி உண்மையானவையல்ல.

தமிழரின் வரலாற்றிலே களஞ்சென்று போர்நிகழ்த்திய வீரமங்கையர் பற்றியோ செயற்கரிய செயல் புரிந்த மகளிர் பற்றியோ இரண்டு தசாப்தங்களுக்கு முன்புவரை செய்தி எதுவுமே இல்லை என்றே சொல்லி விடலாம். ஆனால் இன்று ஈழத்தமிழர்களின் மாதர் பிரிவினர் வீரகாவியம் படைப்பதோடு புதியதொரு வரலாற்றினையும் உருவாக்கிப் பெருமை தேடித்தருவது பாராட்டத்தக்கது.

இந்த வரலாற்றிலே முலவித்தொன்றினை வன்னி நாட்டின் வீரத்திலகமான அரியாத்தையின் வரலாற்றிலேதான் நாம் முதன் முதல் காண்கின்றோம். அவள் யானைபிடிக்கும் தொழிலினைப் புரிந்து வந்த வேலப்பணிக்கனுடைய மனைவி: தன் கற்பு நலத்தாலும் துணிவுத் திறத்தாலும் பக்திப்பாங்கினாலும தன் கணவனே பிடிக்கத் தயங்கிய மதயானையைப் பிடித்துக் கட்டும் அரிய சாதனை புரிந்தவள். வன்னிநாட்டு மகளிடையே நாட்டுப்பாடல் வடிவில் இன்றும அவள் தை உலாவி வருகின்றது. பெண்ணடிமைத் தளையறுத்துப் பெருமை பெற்று ஆணுக்கு சரிநிகர் சமானமாகத் தலைநிமிர்ந்து நிற்க. ஈழத்தமிழகத்து மகளிர் முனைந்து நிற்கும் இக்கால கட்டத்தில். அவளின் வரலாறு அவர்களின் உணர்வை மேலும் கிளந்தெழச் செய்ய வல்லது. நண்பர் செ. மெற்றாஸ்மயில் இவ்வுண்மையை உணர்ந்து அரியாத்தை கதை நாட்டுப்பாடலை நூல் வடிவிலே வெளியிடுவது 'காலத்தால் செய்த நன்றி'. 'அநுஞாலத்தின் மாணப்பெரிது' என்று சொல்லவும் வேண்டுமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்கூத்துக் கலைஞரும் கல்விமானுமான தீரு. செ. மெற்றாஸ்மயில் அரியாத்தைக் கதைப்பாடல்களைத் தருவதோடு நில்லாது, வன்னியர் வரலாற்றையும், கதைப்பாடலையும் ஆராய்ந்து சிறந்ததொரு விரிவான தன்னுரையும் எழுதி வெளியிடுகின்றார். அது வரலாற்றுத்துறையில் ஈடுகொண்டவர்க்கும், வன்னியர்பற்றி அறிய ஆர்வம் கொண்டவர்க்கும் ஏற்றுப் போற்றிப் படிக்கும் வகையில் அமைந்துள்ளது. பின்னிணைப்பாக அரியாத்தையை மையமாக வைத்துப் பெண்ணின் பெருமையை நண்பர் அழகாக எடுத்து விரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

காலத்தின் தேவையுணர்ந்து தீரு மெற்றாஸ்மயில் வழங்கியுள்ள அன்புக்கொடைக்கு என் இதயங்கனிந்த பாராட்டுக்கள் உரியன.

ஆனையை அடக்கிய அரியாத்தை நூலுக்கு வெளியூட்டுரை வழங்குவதிற் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

நண்பரின் அறிவுப்பணியும் கலைப்பணியும் மேன்மேலும் சிறந்தொளிர என் நல்வாழ்த்துக்களை அவருக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

நாயமார்கட்டு,
யாழ்ப்பாணம்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இயற்கை வளம் நிறைந்ததும் வீரவுணர்வு மிகுந்ததுமான வன்னிப்பிரதேசத்தில் நிகழ்ந்த ஓர் உண்மைச் சம்பவம் ஆனையை அடக்கிய அரியாத்தை. இந்த வீரவரலாற்றை உங்கள் கரங்களில் தவழ வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். வீரம், கற்பு நிறைந்த ஒரு ஈழத்தமிழ்ப் பெண்ணின் பெருமையை வெளி உலகிற்கு எடுத்துக் காட்டும் என் முயற்சியை ''இந்நூல்'' நிறைவேற்றி வைக்கும் என்பதில் ஐயமில்லை.

நாட்டார் வழக்கியலை அறிவதற்கு, நாட்டார் பாடல்கள், கதைகள், கதைப் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், கைவினைப் பொருட்கள், நம்பிக்கைகள் திருவிழாக்கள், விளையாட்டுக்கள், கட்டடக்கலை, மருத்துவம், தொழில் நுட்பம், ஊர்ப்பெயர்கள், மக்கள் பெயர்வு, இலக்கியங்கள், பள்ளிகள் (பாடசாலைகள்) என்பன உறுதுணையாக உள்ளன. இவற்றில் நாட்டார் இலக்கியத்தில் முக்கிய இடத்தைப் பெறுகின்ற ஒப்பாரியின் ஊடாக வரலாற்றறிமுகமாக வேலப்பணிக்கன் ஒப்பாரி, 'ஆனையை அடக்கிய அரியாத்தை' என்ற பெயரில் அமைகின்றது.

இந்நூலில் பின்வரும் வினாக்கள் உட்பட வேறும் வினாக்களை வாசகர்கள் எழுப்பலாம் என்று எண்ணுகின்றேன். அவையாவன:-

1. இந்தியாவிலுள்ள வன்னியர்களும், இலங்கை வன்னியர்களும் ஒரினத்தினரா?

2. வன்னிநாட்டில் குறு நில மன்னர்கள் ஆட்சி செய்தார்கள் என்று கூறலாமா? அதாவது அவர்கள் மன்னர்களாய் விளங்கினரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஒப்பாரிப் பாடல்களில் வரும் ஆனை கொடூரமான ஆனை என்று கூறலாமா?

4. ஒரு பெண் ஆனையை அடக்கியதை உண்மைக் கதையாகக் கொள்ளலாமா?

5. செத்த பிணம் எழும்புமா?

'வேலப்பணிக்கன் ஒப்பாரி' ஒல்லாந்தர் காலத்திலேயே (17-ல் நூற்றாண்டில்) பாடப்பட்டது என்பதை இந்த ஒப்பாரிப்பாடலில் வரும் 'உலாந்தா மறியல்' என்ற சொல் ஆணித்தரமாக நிரூபிக் கின்றது. இக்காலத்தில் பணிக்கர் வன்னிப்பகுதியில் யானை பிடிக்கும் தொழிலைச் செய்து வந்துள்ளனரென்று இந்நூலில் குறிப்பிட்டுள்ளேன். இவர்களுக்கும், இந்தியாவுக்கும் பல தொடர் புகள் இருந்துள்ளன என்பதையும் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் இலங்கையிலுள்ள வன்னியர் வேறு எனச் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதை அவர்கள் சான்றுகளுடன் நிரூபிக்க வேண்டும்.

வன்னி நாட்டினை அங்குள்ள குறு நில மன்னர்கள் ஆண்ட னர் எனப் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளேன். இதற்கு ஆதார மாக இப்பாடலிலேயே ''எங்களை யாளும் சின்ன வன்னியனார்'' எனப் பல இடங்களில் வரும் பாடல் வரிகளைக் குறிப்பிட விரும்பு கிறேன். எனவே மக்கள் தமது நிர்வாகத்தைச் செயற்படுத்திய வரை மன்னராகவே கருதிக் கொண்டனர். ஆகையினால் அவர் களைக் குறு நில மன்னர் எனக் குறிப்பிட்டுள்ளேன். இதை உறுதி செய்யும் வகையில் பேராசிரியர் சோ. பத்மநாதன் (வர லாற்றுத்துறை அவர்கள் வன்னியர் என்னும் தமது நூலில் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். உதாரணமாக ஓர் இடத்தைக் குறிப்பிடுகின்றேன். (வன்னியர் பக்கம் – 35)

1. இரண்டாம் பராக்கிரமபாகு ராஜரட்டையிலும் ரோகணத்திலுமுள்ள வன்னி மன்னர் மேலே தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தியிருந்தான்.

2. இராஜரட்டையிலிருந்து வன்னி மன்னர் அவனைக் கண்டு கௌரவித்துத் தீறை கொடுத்தனர்.

3. வன்னிராசர் படைகளை வைத்திருந்தனரென்றும், வெண்கொற்றக் குடை, சாமரம், ஆசனம் முதலிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றைத் தம் பதவிச் சின்னங்களாக இளவரசனிட மிருந்து பெற்றனரென ஆளவம்சம் கூறும்.

4. இரண்டாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் வன்னிமை என்ற குறு நிலவரசுகள் வளர்ச்சியடைந்த நிலையிலிருந்தனவென்று கொள்ளலாம்.

எனவே வன்னியில் ஆட்சியைப் புரிந்தவர்கள் வேறு மன்னரின் கீழ் அவர்களுக்குத் திறை கொடுத்து நிர்வகித்தாலும் அவர்கள் மக்களுக்கு மன்னர்கள் போல்தான் இருந்தார்கள் என்பதற்கு ஐயமில்லை. ஆனால் இந்நூலினை எழுதுவதற்கு முன்பாக என்னுடன் பலர் ''வன்னியை நிர்வகித்தவர்கள் பிரதானிகளே ஒழிய, மன்னர்கள் இல்லை'' என்று வாதிட்டனர். எனினும் அப் பிரதேசங்களில் மன்னரைப் போன்று அவர்கள் இருந்தமையால் பிரதானிகள், என்று நான் குறிப்பிடவிரும்பவில்லை.

இந்த ஒப்பாரியில் முக்கிய இடத்தைப் பெறுவது ஆனை. பல கோணத்தில் அதன் குணாதிசயத்தை ஆய்வாளர் குறிப்பிட விரும்புகிறார்கள். ஆங்காங்கு மத ஆனையென்றும், கொடூர ஆனையென்றும் குறிப்பிட்டுள்ளேன். இதற்கு ஆதாரமாக ஆனையைப் பற்றி ஒப்பாரியில் குறிப்பிடும் ஒரு பாடலில்:

''எங்களை ஆளும் சின்னவன்னியனாரே - அது
ஏழுமுழ யானை அல்லோ - அது
கோபமுள்ள யானையது
எங்களை ஆளும் சின்னவன்னியனாரே - அது
குளறுதே மாமுகில்போல்.''

என வருகின்றது. இப்பாடலின்படி அது ஒரு கொடூரமான யானை என்பதை அறியக்கூடியதாக உள்ளது.

எனினும் சில ஆய்வாளர் அதிக விலைக்கு விற்கக்கூடிய நல்ல தந்தங்களைக் கொண்ட பெரிய ஆனையை எப்படியும் பிடிக்கவேண்டும் என சின்ன வன்னியனார் எண்ணினாரே தவிர, அந்த ஆனை கொடூரமான ஆனையல்ல எனக்கூற முற்படுகின்றனர். இதற்கு தமக்குச் சாதகமாக 'அங்கே நிற்குதாம் நல்ல கொம்பன்' என்ற பாடல் வரியை ஆதாரமாக காட்டுகின்றனர். இப்பாடலில் வரும் நல்ல என்ற சொல் ஆனையைக் குறிக்கின்றதா அல்லது தந்தத்தின் பெறுமதியைக் குறிக்கின்றதா என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி எழுகின்றது. எனவே முன்பு குறிப்பிட்டுள்ள பாடல் அடிகளும் 'நல்ல கொம்பன்' என்ற சொல்லைத் தொடர்பு படுத்தி நோக்கும் பொழுது நல்ல தந்தமுடைய கொடுரமான ஆனை என்றே கொள்ள வேண்டியுள்ளது.

இந்நூலில் வரும் கதையைப் பலர் கற்பனைக் கதையாக எண்ணுகிறார்கள்; யானைக்குக் கிட்ட ஒரு பெண் போகமுடியுமா என்று எண்ணுகிறார்கள்.

ஆனையை மடக்கிப் பிடிப்பதற்கு ஓர் ஆண் ஆனைப்பாகனால் முடியுமானால், ஆனையை ஒரு பெண் கட்டினாள் என்பதை ஏன் நம்பமுடியாது? ஆனையைக் கட்டுவதற்குச் சில ஆனைபிடிப் பவர்கள் மந்திர தந்திர உபாயங்களைக் கைக்கொண்டிருந்தனர் என்பதை நாம் கண்கூடாக அறிகிறோம். அப்படியானால் ஆனையுடன் போரிடக்கூடிய தைரியம் இல்லாவிட்டாலும் தெய்வ பலமுள்ள கற்புடைய ஒருத்தி தனது மனோ பலத்தினால் ஆனை யைக் கட்டினாள் என்ற கதையை ஏன் உண்மைக் கதையாக நம்பமுடியாது?

வேலப்பணிக்கன் ஒப்பாரியில்

"எனக்கிணங்கும் நாயகியே - நீரும்
அன்பாய்க் கையைத் தாருமென்றார்
செத்த பிணந்தானெழும்பி
வேலப்பணிக்கர் பெண்சாதி - அவ
திட்டமாய்க் கைகொடுத்தாள்."

எனவரும் சம்பவமான

"செத்த பிணம் எழும்புகின்ற நிகழ்ச்சியை நம்பலாமா? இது கற்பனையன்றோ" என கேள்வி எழுப்புகின்றனர்.

இப்பாடலில் செத்தபிணம் எழும்புதல் என்ற கருத்தில் கூறப் படவில்லை என்றே நம்புகின்றேன்.

செத்த பிணத்திற்கு நெஞ்சிலே மரக்குற்றி சரியாக வைக்கா விட்டால் – அந்தப் பிணம் – எரியும் பொழுது தலைபக்கமாக எழும்புவது போன்ற தோற்றத்தைக் காணலாம் இன்றும் பல சுடு காடுகளில் முற்றாக எரியாத பிண முண்டம் அவ்வாறு எழும்பு துவ போன்ற தோற்றத்தைக் காணக்கூடியதாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இவ்வாறான தோற்றத்தைக் கண்ட காட்சியைப் புலவன் 'செத்த பிணம் தான் எழும்பி' என்று பாடினான். என்றே கொள்ள வேண்டும்.

எனவே இந்த ஒப்பாரிப்பாடலில் வரும் 'ஆனையைக் கட்டிய அரியாத்தை' ஈழத்தமிழகத்தின் முதலாவது வீரப்பெண் என்பதையும் இவ்வாறான வரலாற்றுச் சான்றுகளை உடைய மரபுவழி இலக்கியங்களை ஆராய்ந்து எமது பழம் பெருமைகளைப் புதியவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதையும் மனங்கொண்ட ஆசையாலும், எனது பங்களிப்பைச் செய்து இந்நூலினை எழுதினேன்.

இந்நூலினை எழுத யோசித்த பொழுது எனக்கு முதலில் உற்சாகமளித்து ஆலோசனை தந்தவர்கள் மயிலங்கூடலூர் பி. நடராசன் வேலணை/ஊர்காவற்துறைக் கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. நா. சுந்தரலிங்கம் ஆகியோராவர். எனக்கு உற்சாகமளிக்கும் விதத்தில் பாராட்டுரை வழங்கியவர் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரபிள்ளை. அணிந்துரை வழங்கியவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ். பலவேலைப் பழுவின் மத்தியிலும், ஆய்வுசெய்து சிறந்த முன்னுரை எழுதி வழங்கியவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி. அறிமுகவுரையை எழுதியவர் யாழ் பிரதேச செயலாளரும், பிரபல எழுத்தாளருமான திரு. க. குணராசா (செங்கை ஆழியான்) வெளியீட்டுரையை வழங்கியவர் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின் போசகரில் ஒருவரான திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்கள்.

வரலாற்றுக் கருத்து வெளிப்பாட்டோடு கூடிய அட்டைப் படத்தை அழகுற வரைந்து தந்தவர் கல்வித்திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளரும், நாடறிந்த ஓவியக் கலைஞருமான 'ரமணி' அவர்கள்.

அச்சிடுவதற்கு ஊக்கமும், உதவியும் புரிந்தவர்கள் வேலணை, யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், என்மேல் அன்பும் மதிப்பும் வைத்துள்ள பெரியார்கள், நண்பர்கள், பல்கலைக்கழகத்தின் சில விரிவுரையாளர்கள்.

இந்நூலினை எழுதியபின் தட்டச்சில் பொறித்தும். 'புறூப்' பார்த்தும் உதவி செய்தவர்கள் செல்வி கி. யூ. மே. இமல்டா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு அ. வேலாயுதம் நூலின் உட்பக்க 'புளக்' எழுத்தினை எழுதித் தந்தவர், ஆசிரியை திருமதி கமலாவதி நிர்மலகுமார்.

சிறப்பாக அச்சிட்டு வழங்கியவர்கள் 'மணிஓசை' அச்சகத்தினர். இந்நூலினைப் பார்ப்பவர்களே அச்சகத்தில் கடமைபுரியும் ஊழியர்களின், உரிமையாளரின் வேலைக் கணிப்பை அறிந்து கொள்வீர்கள்.

அட்டைப் படத்தைக் கொழும்பில் அச்சிட்டுக் கொண்டுவருவதற்கு உடனியாக இருந்தவர்கள் பேராசிரியர் நீ. மரியசேவியரும், திருமறைக்கலாமன்ற நிர்வாகத்தினரும். முக்கியமாக யோசேப் அவர்கள்.

இவர்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செல்லையா மெற்றாஸ்மயில்

ஆஸபத்திரி முன்ஒழுங்கை
நாயன்மார்கட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்.
1994 - 09 – 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துரை 3
அணிந்துரை 5
முன்னுரை 7
அறிமுகவுரை 15
வெளியீட்டுரை 18
என்னுரை 21
பொருளடக்கம் 27

1. ஈழத்தில் வன்னியர் வரலாறு 29
2. வன்னியர் வீரம் 34
3. அரியாத்தையின் புகழ் கூறும் இலக்கியங்களும் செய்திகளும் 37
4. கர்னபரம்பரைக் கதையில் அரியாத்தை 41
5. ஒப்பாரியில் வீராங்கனை அரியாத்தையின் வரலாறு 42
   அ) தமிழக-ஈழத்தமிழகத் தொடர்பும் யானையின் பயன்பாடும்
   ஆ) மதம் கொண்ட வேழத்தின் அடங்காமை
   இ) மதயானையை அடக்கும் முயற்சி
   ஈ) வீராங்கனை அரியாத்தை யானையை அடக்குதல்
   உ) அரசனின் பாராட்டும் பரிசில்களும்.
   ஊ) சூழ்ச்சியின் வரிசையில் அரியாத்தை
   எ) கற்புடைய வீராங்கனை
6. வேலப்பணிக்கன் ஒப்பாரியின் சமூக பண்பாட்டுச் செய்திகள் 57
   அ) சகுனம் பார்த்தல்
   ஆ) வீரர்களைக் கௌரவித்தல்
   இ) திருமணம்
   ஈ) பிள்ளி சூன்யம்
   எ) கணவன் உடன்கட்டை ஏறுதல்.
7. வேலப்பணிக்கன் ஒப்பாரி இலக்கியத்தின் சிறப்பு 61
8. ஈழத்தமிழரின் முதல் வீராங்கனை 65

பின்னிணைப்பு
1. வேலப்பணிக்கர் ஒப்பாரி 69
2. நிலவுடமைச் சமுதாயத்தில் அரியாத்தை 96

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய படைப்புக்கள்:

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்
கழகத்தின் அடுத்த வெளியீடு

செல்லையா மெற்றாஸ்மயிலின்
ஆய்வு நூல்

யாழ் மாவட்ட

"கூத்துக் கலைஞர் களஞ்சியம்"

பகுதி I
(பிரதேச செயலர் பிரிவு, யாழ்ப்பாணம்)

தொடர்ந்து யாழ் மாவட்டத்தில் ஏனைய பிரிவுகளுக்குரிய கூத்துக் கலைஞர்களினதும் வரலாறு அடங்கிய களஞ்சியம் ஆய்வு செய்து வெளியிடநூல் ஆசிரியர் உள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்
கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில்
# வன்னியர் வரலாறு 1

வன்னியின் தோற்றத்தையும், குலச்சிறப்புக்களையும் சிலை எழுபது, வன்னியர் புராணம், வன்னியர் குலநாடகம், வன்னியர்குல கல்யாணக்கொத்து என்ற நூல்கள் எடுத்தியம்புகின்றன பன்னிரண்டு பன்றிகளிலிந்து நாற்படை வன்னியர் தோன்றினரெனக் கல்லாடம் செப்புகின்றது. ஏனைய நூல்கள் வன்னியர் அக்கினிகுல க்ஷத்திரியரென்றும் இவர்கள் யாகக் கினியிலிருந்து தோன்றினரென்றும் சொல்கின்றன. வன்னியரின் தோற்றம் பற்றிக் கூறுமிடத்து 'வீதிகுலத்தோர்' சிறப்புறச் செய்த வேள்விக்குச் சிறந்த வன்னி,- உதிகுலத்தோ ராதலினாலுயர் குலத்தோ ராமிவர்க்குத்- துதிகுலத்தோ ரொவ்வாரே. எனச் சிலை எழுபதும், பங்குனித்திங்களுத்தரந் தன்னில் பரமன் முக்கணழல் விழியில் துங்கமா வேர்வை தோன்றிடக் கரத்திற் தோய்ந்து செழுங்கழுநீரின் மலரைப் – பொங்கமா முகத்திலாகுதி யியற்றிடப் புனிதனுக்கு வகையிந்தார் – (வ)ங்கண் வீரவன்னியபூ மன்னர் பரிமீது தோன்றினனே.' என வன்னிபுராணமும் கூறுகின்றன.

வீரவன்னியர்கள் ஆண்டசிற்றரசுகள் ஆர்க்காடு, செங்கற்பட்டுமாவட்டங்களிலே. அதாவது தொண்டை மண்டலத்திலே காணப்பட்டன. சோழப்பேரரசில் சாமந்தராகி அப்பேரரசு தளர்வுற்றகாலத்தில் வன்னியர் குறுநிலமன்னராக எழுச்சிபெற்றனர். பன்னிரண்டாம் நூற்றாண்டிலே தோன்றிய தென்னக வன்னிமைகள் பதினாறாம் நூற்றாண்டுவரை நிலைபெற்று வந்தன. முதலாம் இராசேந்திரன், இரண்டாம் இராசேந்திரன் ஆகியோர் கல்வெட்டுக்களிருந்து வன்னியர்கள் பிரதானிகளாக இருந்தனரென அறியலாம். இரண்டாம் இராசராசன் மூன்றாம் குலோத்துங்கன் ஆகியோர் கல்வெட்டுக்களில் வன்னியர்பற்றிக் குறிப்புக்கள் பல காணப்படுகின்றன. சோழப்பேரரசு நலிவுபெற்ற காலத்தில் குறுநிலமன்னராகிய வன்னியர்கள் சுதந்திரமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளத்தொடங்கினர். சோழராட்சிக்குப்பின் இரண்டாவது பாண்டியப்பேரரசு நிலைபெற்ற காலத்தில் வன்னியர் பாண்டியராட்சிக்கு உட்பட்டிருந்தனர். விசயநகர மன்னர் காலத்தில் அம்மன்னர்களோடு வன்னியர் போர் நிகழ்த்தித் தோல்வியுற்றனர். கிருஷ்ண தேவராயர் காலத்தையொட்டித் தமிழகத்து வன்னிமைகள் அரசியல் ஆதிக்கத்திலிருந்து அழிந்தொழிந்தன.

தமிழகத்தில் வன்னியர் வேளக்காரைப்படைகளின் தலைவர்களாக இருந்தனர். வேளக்காரப்படைகளின் தலைவர்களே வன்னிநாயகன் என்ற பட்டத்தைப் பெற்றிருந்தனர். சோழப்பெருமன்னர் காலத்திலே கிழியூர் மலையமன்னர், பங்கள நாட்டுக் கங்கர், சாம்புவராயர் ஆகிய மூன்று குலத்துக் குறுநில மன்னர் வன்னிநாயகன் என்ற விருதுடன் ஆட்சிசெய்தனர்[1] கூத்தாடும் தேவன் பிருதுவி கங்கன் **ஆனைகட்டின** என்ற விருதினையும் பெற்றிருந்தான் ஒரு யானைப்படையை எதிர்த்துப் போரில் ஈட்டின சாதனையின் பயனாகவே இவன் மன்னனிடமிருந்து விருதினைப் பெற்றிருக்க முடியும். இம்மரபின் அடிப்படையிலே ''வேழம்படுத்த வீராங்கனை அரியாத்தை'' க்கும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டாள் என்பது புலப்படும்.

பொலநறுவைக்காலத்திலும் (993 - 1215) அதன் பின்பும் தென்னகத்திலிருந்து வன்னியர் ஈழநாட்டிற்கு வந்தனர். ஈழத்தில் வன்னியர் வசமிருந்த படைப்பற்றுக்கள் பல வன்னிமைகள் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தன. பொலநறுவை அரசு அழிவுற்றதும் வன்னிநாடுகள் என வழங்கிய பல குறுநில அரசுகள் எழுச்சிபெற்றுப் பல நூற்றாண்டுகளாக ஈழவரலாற்றிலே சிறப்பிடம் பெற்றிருந்தன. இவை வட இலங்கையிலும் (தற்போதைய வன்னி உட்பட) மேற்கிலே சிலாபம். புத்தளம் முதலிய இடங்களிலும், கிழக்கிலே திருகோணமலை மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் வளர்ச்சியடைந்தன. பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு ஈழம் முழுவதும் ஒரே மன்னர் ஆட்சியில் ஆண்ட வரலாறு 13 – ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கலிங்கமாகனது படை எடுப்போடு முற்றுப் பெறுகின்றது. அதன்பின் வடக்கில் ஒரு அரசும் தெற்கில் ஒரு அரசும் பல குறுநில அரசுகளும் தோன்றின. மாகனுக்குப்பின் வட இலங்கையிற் பாண்டியர் ஆதிக்கம் இடம்பெற்று, பதின்முன்றாம் நூற்றாண்டின் இறுதியில் ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சி ஆரம்பமாகியது. அதன் விளைவாக இடம்பெற்றதே ''**யாப்பபட்டண**'' என அழைக்கப்பட்ட யாழ்ப்பாணப் பட்டணம் என்ற தமிழரசு. இத்தமிழரசின் காலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலே பல வன்னிநாடுகள் இருந்தன. இக்கூற்றினைப்பல சரித்திர ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். வரலாற்று ஆசிரியர் கலாநிதி சோ. பந்மநாதன் பின்வருமாறு ஈழத்து வன்னிமைகள் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

"இரண்டாம் பராக்கிரமபாகு ராஜரட்டையிலும் ரோகணத்திலுமுள்ள வன்னிமன்னர் மேலே தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தியிருந்தான். அவ்வரசனது ஆட்சிக்காலத்தில் இளவரசனான விஜயபாகு அனுராதபுரத்துக்குச் சென்றபோது ராஜரட்டையிலிருந்த வன்னி மன்னர் அவனைக் கண்டு கௌரவித்துத் திறை கொடுத்தனர். வன்னி ராசர் படைகள் வைத்திருந்தனரென்றும் வெண்கொற்றக்குடை, சாமரம், ஆசனம் முதலியவற்றைத் தம் பதவிச்சின்னங்களாக இளவரசனிடமிருந்து பெற்றனரென்றும் தூளவம்சம் கூறும். எனவே இரண்டாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் வன்னிமை என்ற குறு நிலவரசுகள் வளர்ச்சியடைந்த நிலையிலிருந்தன வென்று கொள்ளலாம். அரசனுக்குத் திறை செலுத்தியபோதும். தத்தம் பிரதேசங்களைச் சுயமாகவே ஆளுவதற்கும் வன்னி மன்னர் உரிமை பெற்றிருந்தனர். ஆகையால் வன்னிமைகள் பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பே தோன்றியிருக்க வேண்டும். பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஈழநாட்டின் பெரும் பிரிவுகளாக ராஜரட்டை, மாயரட்டை, ரேகணம் என்பனவற்றில் வன்னிமைகள் காணப்பட்டதும் கவனத்திற்குரியது"

ஈழத்தில் வன்னிமைகள். வடஇலங்கையைத் தவிரத் தம்பதேனியா. குருநாகல், கம்பளைக்கோட்டை, திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம், சிலாபம் ஆகியவற்றிலும் காணப்பட்டன அங்குகுறுநில மன்னர்களாக வன்னியர்கள் இருந்திருக்கிறார்கள்.

வட இலங்கையில் வன்னியர் செல்வாக்குப் பெரிதும் காணப்பட்ட இடம் அடங்காப்பற்று வன்னியாகும். வன்னி, மேற்கிலே கற்பிட்டியிலிருந்து பூநகரிப் பக்கமாகவும் கல்முனை வரை காணப்படும் செட்டிகுளம், மாதோட்டம் முதலான இடங்களை அடக்கிக் கிழக்கிலே திருகோணமலைவரையும் பரந்து காணப்படுகிறது. பனங்காமம், முள்ளியவளை, கருநாவல்பற்று, தென்னமரவடி, மேல்பற்று கரிக்கட்டுமூலை, செட்டிகுளம்பற்று. என்ற வன்னிமைகள் தமிழரசர் காலத்திலே யாழ்ப்பாண அரசில் சிறப்பிடம் பெற்றிருந்தன. அடங்காப்பற்றை வன்னியர் கைப்பற்றியது பற்றி வையாபாடல் கூறும் சில வரலாற்றுண்மைகளாவன :-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அடங்காப்பற்றைக் கைப்பற்றுவதற்கு வன்னியர் தம்மிடம் போதிய படையில்லை என்பதை உணர்ந்திருந்தனர். எனவே தமிழக உதவியைப் பெற்றுத் திடவீரசிங்கன் கரிக்கட்டுமுலைப் பற்றுக்கு அதிபதியானான். இளஞ்சிங்கமாப்பாணன் முதலியோர் சான்றாரையும் (சாண்டார்), வலையரையும் துரத்திவிட்டு முள்ளியவளையைக் கைப்பற்றினார்கள். நீலையினார் இசை யாண்டாரும் படையினரும் மேல்பற்றுக்கு வந்து சகான். மகான் என்ற வேட்டுவத் தலைவர்களைக் கொன்றுவிட்டு நாட்டையாண் டனர். மேற்குமுலை, கிழக்குமுலை என்பவற்றைக் கைப்பற்றிய சிங்கவாகுபொக்கா வன்னியிலிருந்தான். சுபதிட்டா என்னும் அந்தணரும், படையினரும் திரியாய் என்னுமிடத்திற்குச் சென்று நீலப்பணிக்கனைக் கொன்றுவிட்டு அந்நிலத்தை ஆண்டனர். காலிங்கன், மலையகத்தார், கன்னார் முதலியோர் கச்சாயிலே குடியிருந்தார்கள். அங்கசன் கட்டுக்குளத்திற்குச் சென்று வாழ்ந்தான். புகழ்மிக்க சிங்கவாகு திருகோணமலைக்குச் சென் றான். மாமுகன், வெருகல், தம்பலகாமம் என்பவற்றைக் கைப் பற்றி ஆளச் சென்றான். மைடன் என்போன் கொட்டியாரத்திற்கு அதிபதியானான். ஒடுக்கன், நீலன், மைலன் என்போர் முறையே துணுக்காய், இத்திமடு, நெடுங்கேணி என்னுமிடங் களுக்குச் சென்றனர். ஆற்றல் பொருந்திய சன்மன் நொச்சி முனையில் ஆண்டான் நாகன் புல்வெளிக்குச் செல்ல நீலை யினான் வாகுதேவன் தனிக்கல்லிலிருந்தான்.

வன்னியர்கள் வந்தபின்னர் அவர்களை அடுத்து அவர்களின் மனைவிமாரும் பரிவாரங்களும் அடங்காப்பற்றை வந்தடைந்தனர். இவ்வாறு வாழ்ந்தவர்களுள் மதுரவீர மழவராயனும் நாட்டை யாண்ட மழவராயனும் மன்னனோடு யாழ்ப்பாணத்தில் இருந் தார்கள். பூபால வன்னிமையும் கோபாலரும் கட்டுக்குளத்திலும். திரியாயிலும் இனிது வாழ்ந்தனர். வில்வராயன் நல்லூரில் இருந்தான் குடைகாத்தான். கொடித்தேவன். தேவராயன். கந்தவனத்தான் என்போர் செட்டிகுளத்தின் அதிபதிகளாயினர். உந்துஸ்கராயன் பனங்காமத்தில் வாழ்ந்தான்.

மேற்கண்ட வரலாற்றை முழுமையாக எடுக்கமுடியா விட் டாலும் பல உண்மையான தகவல்கள் பெறக்கூடியதாகவுள்ளது. சங்கிலியன் போன்ற பலமிக்க அரசர்கள் அடங்காப்பற்று வன்னியரிடம் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டி அவர்களிடம் திறை பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போத்துக்கேயரும். ஒல்லாந்தரும். வன்னியரிடம் திறை பெற்றனர். எனினும் யாழ்ப்பாணத்திற்குச் சென்று திறை கொடுக்க மறுத்ததுடன் ஒல்லாந்தருக்கெதிராகக் கண்டி அரசனின் உதவியையும் பெறுவதற்கு முயன்றனர். கண்டிக்கும். வன்னிக்கும் உள்ள தொடர்பை 'வேலப்பணிக்கன் ஒப்பாரி' யில்வரும் 'கண்டியால் கொண்டு வந்த எங்களையாளும் சின்ன வன்னியனார் பெண்சாதி - ஒரு கண்ணறைப்பட்டு மொன்று' எனவரும் பாடல் உறுதி செய்கின்றது. ஒல்லாந்தர் காலத்தில் தென்னமரவடி, பனங்காமம், மேல்பற்று ஆகிய இடங்களில் வன்னியரின் ஆட்சி நிலை பெற்றது. இவற்றுள் பனங்காமத்தை ஆண்ட வன்னியர்கள் பெருவல் பெற்றிருந்ததோடு அயலிலுள்ள வன்னிமைகளின் பிரதேசங்களையும் கைப்பற்றியிருந்தனர்.

கயிலை வன்னியனார் மடதர்ம சாதனப் பட்டயத்தின்படி பதின்மூன்றாம். பதின்னான்காம் நூற்றாண்டுகளில் வன்னியிலே ஏழுக்கு மேற்பட்ட குறுநில அரசுகளிலிருந்தனவென்று கொள்வதற்கிடமுண்டு. காலப்போக்கில் அயல்நாடுகளைப் பலம் வாய்ந்த வன்னியர் ஆக்கிரமித்தன் விளைவாக ஏழு வன்னி நாடுகள் வளர்ச்சியடைந்தன. மேலும் இக் கூற்றினை உறுதி செய்யுமுகமாக - வேலைப்பணிக்கன் ஒப்பாரியில் வரும் 'ஏழு ஊரூப்பணிக்கருக்கும் என் நஞ்சையுண்ட ஐங்கரனே அன்பரே ஆதரவே அவர் எழுதிவிட்டார் ஓலைதனை' எனவரும் ஒப்பாரிப் பாடல் உறுதி செய்கின்றது.

எனவே தமிழகத்திலிருந்து வந்த வன்னியர்கள் உள்ளூர்ப் பிரதானிகளை வென்று, குறுநில மன்னர்களாக இருந்து ஆதிக்கம் கொண்டவர்களாக விளங்கினர். திறை செலுத்தினாலும் வன்னியர் சுயமாக ஆண்டு, அவற்றிற் சேவை புரிந்த முதலியார், கண்காணி, பண்டாரம்பிள்ளை, தலையாரி, அடப்பனார் – முதலிய எல்லா அதிகாரிகளையும் நியமித்து நிர்வாகத்தில் செல்வாக்கை நிலைநாட்டினர். வன்னி நாடுகளிலுள்ள வாரம், தீர்வை, காணிக்கடன், ஆள்வரி முதலிய எல்லா இறைவரிகளையும் வன்னியரே பெற்றனர்.

இவ்வன்னியருக்குப் படைத்தளபதியாக, படைவீரர்களாக வேளைப்படைவீரர்களாக இருந்தவர்கள் பணிக்கர்கள். வன்னியர் வன்னிநாட்டைக் கைப்பற்றும்போது திரியாயில் நீலப்பணிக்கன் அதிகாரம் படைத்தவனாக இருந்தான். அவனை வன்னியர் வென்றுதான் திரியாயைப்பிடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியர் வீரம் 2

இலங்கையில் கடைசிவரையும், அடங்காப்பற்றுடன் தம் மண் ணுக்காகப் போராடிய வீரர்கள் வன்னியர்களே. இலங்கையில் எல்லாப் பகுதிகளையும் கைப்பற்றிய ஆங்கிலேயர் கடைசியாகப் பிடித்த பிரதேசம் வன்னிநாடே. ஆங்கிலேயருக்குக் கிடைத்த வெற்றியும் காட்டிக்கொடுத்த காக்கைவன்னியனின் உதவியுடன் தான் கிடைத்தது. பண்டார வன்னியனை அவர்கள் வென்று வன்னிநாட்டைக் கைப்பற்றினர்.

கடைசிவரை போராடிய பண்டாரவன்னியன் வீரம், வன்னி யர் முழுப்பேரினதும் வீரத்திற்கு ஏகசான்றாக விளங்குகிறது. வன்னிநாட்டின்மீது ஆங்கிலேயர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் படையெடுத்தனர். போருக்கு முன்னர் ஆங்கி லேயத் தூதுக்குழு ஒன்று சமாதானம் பேசிப்போனது. அப்போது வன்னியை ஆண்டவருள் ஒருவன் பண்டார வன்னியன். ஆங்கி லேய பீரங்கிப்படை வலிமையை உணர்ந்த வன்னிமைத் தலை மைக்காரன் 'அடிபணிவதே நன்று' என்று பண்டாரவன்னியனுக்கு அறிவுரை வழங்கினர். ஆனால் பண்டாரவன்னியன் கூறியவை வரலாற்றுப்புகழ் வாழ்ந்தவை. ''அன்னியருக்கு அடிபணியும் சமாதானச் சபையில் நான் சந்திக்க விரும்பவில்லை. அதற்கு மாறாகப் போர்க்களத்தில் சந்திக்க விரும்புகிறேன். எழுத்தாணி பிடித்து அடிமை ஒப்பந்தம் போடமாட்டேன். ''வாள்பிடித்துப் போர்செய்து என் வீரத்தை நிலைநாட்டவே விரும்புகிறேன்.'' என்று பண்டாரவன்னியன் பிரித்தானிய தூதுவிடம் வியளம் அனுப்பினான். ''அரசன் எவ்வழியோ குடிகள் அவ்வழி'' என் றாங்குக் குடிகளும் வீரர்காளகத் திகழ்ந்துள்ளனர். பண்டாரவன் னியன் காதலி ஒரு சாதாரண குடிமகள், இவன் காதலி குருவி நாச்சியின் வீரம் வன்னியர் வீரப்பெண்ணினத்தைக் காட்டி நிற்கின்றது.[2]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டாரவன்னியன் போருக்குச் செல்வதை அறிந்த அவன் காதலி தனது பாங்கியர் மூலமாக "என்னை மறக்க வேண்டாம் எனக்குத் தாலி கட்டுங்கள். போர்க்களம் புறப்படும் முன்னர் என் கையாலே உங்களுக்கு உணவு சமைத்து ஊட்டிவிடுவேன். ஆலாத்தி எடுத்து வீரதிலகம் இட்டு அனுப்புவேன். கன்னிப் பெண்ணாய் இருந்துகொண்டு. வீரப்பெண்ணுக்குரிய கடமைகளை நான் செய்யமுடியாது" எனக் கூறும்படி தூது அனுப்பினாள். பின்பு மறுநாள் ஏற்பட்ட சந்திப்பின்போது "நயினாரே என்னை மறக்கமாட்டீரா?" என்றாள். பண்டாரவன்னியனின் மறுமொழி புன்னகையாக அமைந்தது 'சிரித்து சமாளிக்க வேண்டாம்' என்றாள் தலைவி. "சிரிக்க என்ன இருக்கிறது? என்கை வீர வாளை மறக்காது. என் வீர நெஞ்சம் உன்னை ஒருபோதும் மறக்காது. இது சத்தியம். என் வீரவேல்மீது ஆணை. போரில் வெற்றி பெற்றதும் திரும்பி வருவேன். வந்து உன்னை வரிப்பேன்" என்றான் பண்டார வன்னியன்.

பண்டாரவன்னியன் போரில் இறந்தான். அவனையே நம்பி இருந்த குருவிச்சி நாய்ச்சி அவன் இறப்பை அறிந்தவுடன், பொல்லாத நஞ்சாம் கார்த்திகை கிழங்கைக் கிண்டி எடுத்து வந்து அதை உண்டாள். இதை அறிந்த பாங்கி, அவளை வளர்த்த தாய், தந்தையரிடம் ஓடிப்போய்க் கூற அவர்கள் வந்தார்கள். "என்னை அன்புடன் வளர்த்த ஆய்ச்சி, அப்பு என்னைத் தடுக்காதீர்; என் பர்த்தாவைக் காணப் போகிறேன், எனக்காகக் குலதெய்வம் அத்தனையையும் வேண்டிக்கொள்ளுங்கள், நான் பிரியவேண்டிய நேரம் வந்துவிட்டது" என வீரப்புன்னகையுடன் குருவிச்சி நாச்சி இறந்தாள். அதைப்பார்த்த பாங்கியும் பொல்லாத கார்த்திகைக்கிழங்கை சாப்பிட்டு அவளும் வீழ்ந்தாள். இவ்வாறு வீரம்படைத்த வீரர், வீராங்கனைகளைக் கொண்ட நாடே வன்னி நாடாகும்.

சோழர் காலம் முதல் பண்டாரவன்னியன் காலம் வரையிலான வரலாற்றுத் தொடரில் வன்னியில் வீரம் விளைத்த வன்னியரும், வன்னியக் குடிமக்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருத்திதான் வேலப்பணிக்கன் ஒப்பாரி – இலக்கியம் காட்டும் **வீராங்கனை அரியாத்தை**. வேழம்படுத்த வீராங்கனை என்ற நாடக நூலினை வெளியிட்ட அரியான் பொய்கை செல்லத்துரை தமது நூலின் முகவுரையில் குறிப்பிடும்பொழுது "இம்மங்கை நல்லாளின் காலம் சரியாக வரையறுத்துக் கூறக்கூடிய சான்றுகள் இல்லாவிட்டாலும், பண்டாரவன்னியனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிருந்து ஆட்சி புரிந்த அவன் முன்னோர்களில் ஒருவனாகிய சின்னவன்னியன் காலமென்பது பின்வரும் வரலாறும் ஒப்புக் கொண்ட உண்மையாகும். அவன் காலம் இன்றைக்கு முன்நூறு ஆண்டுகளாகுமெனக் கருதுவதால். இவன் காலமும் பதினேழாம் நூற்றாண்டெனலாம். அடங்காப்பற்றெனப்புகழ்பாடி. ஆர்க்கு மடங்காத வன்னியர்களினாலே ஆட்சி செய்யப்பட்ட வன்னி மண்ணிலே வளர்ந்து. வன்னிமண்ணின் பெருமைக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்த அரிவை 'நல்லாள் அரியாத்தை' குமிழ முனை அளம்பில், செம்மலை ஆகிய இடங்களின் இடையே அமைந்துள்ளதாகிய அதிரியாங் கோட்டில் தன் கணவன் வேலப் பணிக்கனுடன் வாழ்ந்து இல்லறம் நல்லறமாக நடத்தினாள்' என்கிறார்.

---

"குளம் அதைச் சார்ந்த வயற்புலம், அயலி லுள்ள மேட்டுநிலக் குடியிருப்பு, சூழவுள்ள மரங்க ளடர்ந்த காட்டுப் பிரதேசம், நீண்ட கடற்கரைப் பிரதேசம் என்றிவ்வாறு முல்லையும், மருதமும் நெய்தலும் மயங்கிய ஒரு புவிச்சூழலே வன்னிக்கான புறவுருவமாகும். உழவுக்குப்பயன்படும் எருமைக் கடாக்கள், பால்தரும் பெண் எருமைகள், பசுக்கள். வண்டி இழுக்கப் பயன்படும் எருதுகள் வேட்டைக் கும் வீட்டுக்கும் காவலுக்குமுரிய நாய்கள். இவை வன் னியின் கருப்பொருட்கள். ஓலையால் வேயப்பட்ட வீட்டுக்கூரை. சாணம் அல்லாது முருக்கம் சாறு ஆகிய வற்றினால் மெழுகப்பட்ட திண்ணை மால் பகுதிகள் இத்தனையும் பிரதிபலிக்கும் இயற்கைச் சூழலின் பகைப் புலத்தில் மண்ணை நம்பி வாழ்ந்து அம்மண்ணிலே வருடந் தோறும் பாடுபட்டு வாழ்க் கையின் தேவைகளனைத்தையும் அதற்குள் நிறைவு செய்து கொள்ளும் தன்னிறைவான ஒரே தனித்து வமான சமூக, பண்பாட்டு மனிதனையே வன்னி யான் என்ற சொல் தனித்துவமாக உணர்த்துகின்ற தெனலாம்.''

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாத்தையின் புகழ் கூறும் இலக்கியங்களும் செய்திகளும்

3

ஈழத்தமிழர் வரலாற்றில் தமிழர்தம் வீரத்தினை எடுத்துக் காட்டும் பல நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன. இந்நிகழ்வுகளை ஓரளவு எடுத்துக்காட்டும் கைலாயமாலை, வையாபாடல், மட்டக்களப்பு மானியம், செகராச சேகரமாலை, பாயிரம், யாழ்ப்பாண வைபவமாலை, கோணேசர் கல்வெட்டு, வையா வசனம் முதலிய வரலாற்று நூல்கள் உள்ளன. எனினும் இவ்வரலாற்று நூல்கள் மூலம் முழுமையான நிகழ்வுகளை அறியற்கூடியதாக இல்லை. இதனால் வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் தற்பொழுது புதைபொருள் ஆராய்ச்சிமூலம் கிடைக்கும் சான்றுகள், கல்வெட்டுக்கள் என்பன மூலம் புதுப்புது வரலாற்று நிகழ்வுகளைக் கண்டு பிடிக்கின்றார்கள். இந்தவகையில் ஈழத்தில் உள்ள மரபுவழி இலக்கியங்களும், பழைய வரலாற்று நிகழ்வுகளை அறிய உதவி செய்கின்றன. வன்னிமண்ணில் மடிந்கொண்ட யானை ஒன்றைக் கட்டமுடியாமல் தவித்த வேளையில் அந்த யானையைக் கட்டிய வீரத்தாயின் வரலாற்றை; வேலப்பணிக்கன் அரியாத்தையின் கதையைக் கூறுவது வேலப்பணிக்கன் ஒப்பாரி.

வேலப்பணிக்கன் ஒப்பாரி இலக்கியம் எழுதா இலக்கியமாக. கர்னபரம்பரையாகக் கேட்டு வந்ததை ஒருசில பதிப்பாளர் நூல் வடிவில் பதிப்பித்து உதவி செய்துள்ளார்கள். 1934 வைகாசி மாதம் 12 –ஆந் திகதி கிழைக்கரையம்பதி வ. கணவதிப்பிள்ளை அவர்களும், 1980 -ஆம் ஆண்டில் வேலப்பணிக்கன் ஒப்பாரிப் பாடல்களைத்தமது **வன்னிவள நாட்டுப்பாடல்** என்னும் நூலில் இந்நூல் ஆசிரியர் செ. மெற்றாஸ்மயில் பதிப்பித்தும் நூல் உருவில் கொண்டு வந்தனர். வாய்மொழிப்பாடல்களில் அதிக அளவு பாடல்கள் ஒப்பாரிகளாக விளங்கிய பொழுதும், வேலப்பணிக்கன் ஒப்பாரி இலக்கியம் தனித்தன்மை கொண்டு விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் வாய்மொழியாக வழங்கும் ஒப்பாரிப் பாடல்கள் பெரும் பாலும் தனி ஒப்பாரிகளாக, அதாவது கணவனை இழந்த மனை வியின் ஒப்பாரியாக, பிள்ளையை இழந்த தாயின் ஒப்பாரியாக, தந்தையை இழந்த மகளின் ஒப்பாரியாக, தாயை இழந்த மகளின் ஒப்பாரியாக அமைந்துள்ளது. இத்துடன் ஒருகதையை ஒப்பாரி யாகச் சொல்லும் தன்மையும் வாய்மொழி இலக்கியத்தில் இருக் கின்றதென்பதற்கு வன்னிப்பகுதியில்வழங்கும் ''வேலப்பணிக்கன்'' ஒப்பாரி சான்றாக விளங்குகின்றது. இத்தன்மையான கதை கூறும் ஒப்பாரிகள் ஈழத்தின் வேறு பகுதியில் இருப்பதாகத் தெரிய வில்லை. அவ்வாறு இருப்பின் இவ்வெளியீடு கொண்டுவரச் செய்யும் என்று எண்ணுகிறேன். கண்டியாரசன் ஒப்பாரி,[5] நிம்மை யன் ஒப்பாரி,[6] கல்லாற்று ஒப்பாரி,[7] பறையன் ஒப்பாரி,[7] என்பன தனி இலக்கியமாக ஆசிரியர்கள் போற்றினும், மனைவி இறந்த பின் கணவன் ஒப்பாரி செய்யும் கதைப்பாடலாக ஏனையவை அமையவில்லை.

இலக்கிய வரலாற்றுக் கதைப்பாடல்கள் வகையில் வகுத்துக் கொள்வது இவ்விலக்கியக் கோட்பாடுகளுக்கு அமைவாகும் என எண்ணுகிறேன். கதைப்பாடல்பற்றி சரஸ்வதி வேணுகோபால் பின்வருமாறு வரையறை செய்கின்றார். ''ஒரிடத்தில் அல்லது ஒரு மாவட்டத்தில் வழங்கப்பெறும் ஒரு புகழ்மிக்க கதைப்பாடல் ஒரு கதை இலக்கிய வடிவமாகப் பெற்றது. கதையை உள்ளடக்கி விளங்குவதால் கதைப்பாடல் என்று பெயர் பெற்றது'' இவ் விளக்கம் பொதுவான வரையறையாகும். ஆனால் கதைப்பாடல் கள் வெவ்வேறு பகுதியில் வெவ்வேறு முறையில் பெயர் பெற்று விளங்கி வருகிறது. அம்மானை மாலை, ஏற்றம், கும்மி, ஒப் பாரி போன்றவையும் கதைதழுவி வரும்பொழுது கதைப்பாடலென லாம். எனவே கதைப்பாடல்களுக்குரிய பண்புகளான தனிச் சம்பவம் ஒன்றைப் பிரதிபலிப்பதனாலும், வாய்மொழி மூலமாக வந்த கதை நிகழ்ச்சிப்பாடல்களாக இருப்பதனாலும் கதைப் பாடல் வகையில் வேலப்பணிக்கன் ஒப்பாரியைச் சேர்த்துக் கொள்ளலாம்.

நவீன இலக்கியங்களில் இக்கதைப்பாடல்களில் வரும் கதை இடம்பெற்றிருக்கின்றது. முல்லைமணியினால், 'அவளும் தோற்று விட்டாள்' என்ற சிறுகதையாகவும், அ. பாலமனோகரனால் குமாரபுரம்? நாவலில் ஒரு உட்கதையாகவும் எடுத்துக்கொள்ளப் ட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டார் வழக்கியல் ஆய்வுக்கட்டுரை ஆய்வாளர்கள் தமது ஆய்வில் ஆங்காங்கே குறிப்பிட்டு வருவதையும் காணக்கூடியதாகவுள்ளது. யாழ் - பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கலாநிதி பார்வதி கந்தசாமியும்,[8] நா. சுப்பிரமணியம் ஐயரும் திருமதி. கலையரசி சின்னையா[9] அவர்களும் தமது கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளார்கள். சொக்கன் அவர்களும் கவிதையாக வெளியிட்டுள்ளார். ''வன்னியின் யானை பிடிக்கும் தொழில் புரிந்து பணிக்கர் சமூகத்தின் கதையான வேலப்பணிக்கன் ஒப்பாரி ஒரு பெண்ணின் வீரத்தைக் கூறும் கதையாக அமைந்தாலும் ஆண்முதன்மைச் சமுதாய உணர்வின் வெளிப்பாடாகவே அமைகின்றது'' எனவிரிவுரையாளர் பார்வதி கந்தசாமி தமது கட்டுரையில் குறிப்பிடுகின்றார். இவ்வாறு வீராங்கனை அரியாத்தையின் வரலாறு, நவீன இலக்கியக்கதைகள், நாவல்கள், ஆய்வுக்கட்டுரையில் இடம்பெற்று வரலாற்று உண்மையை அழுத்தி இலக்கியத்தில் முக்கிய இடத்தை பெற்றுள்ளது.

---

"சோக ரசம் சிந்தும் பொழுது கணவனை இழந்த மனைவி என் செய்வாள்? சண்மணி போன்ற மகனை இழந்த அன்னை என் செய்வாள்? அணிசிந்துவாள்; மணி சிதறுவாள்; குழல்குலைப்பாள்; ஒலமிடுவாள்; அலறுவாள், செத்துக்கிடக்கும் செல்வனைச் சொல் லோவியம் ஆக்குவாள். ஆகையாற்றான் ஒப்பாரிப் பாடல்கள் மகளிரின் பாடல்கள் ஆகின்றன. ஆனால் மனைவியை இழந்த கணவன் ஒலமிடும் ஒப்பாரியே வேலைப் பணிக்கன் ஒப்பாரியாகும். இது ஒரு கதையை ஒப்பாரி வாயிலாகக் கூறும் வாய்மொழி இலக்கியமுமாகும்."

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்னபரம்பரை வரலாறு 4

குமாரபுரத்திலுள்ள (முல்லை மாவட்டம்) குமுழமுனைக் கிராமத்தில் மதயானையை வென்ற மாதரசி வேலப்பணிக்கன் பெண் சாதி அரியாத்தையின் வீரவரலாறு ஒப்பாரியாகப் பாடப்பட்டுள்ளது. பெரிய வெளியில் அமைந்துள்ள கண்டல் என்னும் இடத்தில் மதயானையைக் கட்டிய நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது. இதனால் அந்த இடம் இன்றும் ''கொம்பன் படுத்த கண்டல்'' என அழைக்கப்படுகிறது. இப்பிரதேசம் கரிக்கட்டுமுலை எனத் தற்போதைய உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஒருபகுதியாகப் பெயர் பெற்று விளங்குகிறது. கரி (யானை) யைக் கட்டியமுலை.

வரலாற்றைச் சுருக்கமாக நோக்கில் அப்பொழுது குமுழமுனையைச் 'சின்னவன்னியன்' என்ற குறுநில அரசன் ஆண்டான். தமது பகுதியிலுள்ள யானைகளைப் பிடித்து வெளிநாடுகளுக்குக் கொடுத்துப் பண்டமாற்றுச் செய்வது அவனது வழக்கம். யானைப்பக்கனிர் என்னும் குலத்தவரின் துணையை நாடுவது வழக்கம். அதனால் யானைபிடிக்கும் தொழிலைச்செய்யும் பணிக்கர் குலம் செம்மலையில் (குமுழமுனையில்) வாழ்ந்தது.

ஒருசமயம் ஒருவராலும் பிடிக்கமுடியாத மதம் கொண்ட கொம்பன் யானையை எப்படிப் பிடிக்கலாம் எனப் பணிக்கர் எல்லோரும் கூடி யோசித்தனர். ஒருவன் ''வேலப்பணிக்கன் என்பிடிப்பான்'' என கூறினான். மற்றொருவன் ''இல்லையில்லை வேலப்பணிக்கன் பிடிக்கமாட்டான்; அவனுடைய பெண்சாதிதான் பிடிப்பாள்'' என்று கூறினான். கூட்டம் முடிந்தது வேலப் பணிக்கன் மனம்தளர்ந்து வீடு சென்றான்– வீடு சென்ற வேலப் பணிக்கன் சாப்பிடவில்லை கவலையால் படுத்துவிட்டான். விபரமறிந்த வேலப்பணிக்கன் மனைவி அரியாத்தை விரதமிருந்து முழுகி, வார்க்கயிறு, அங்குசம் போன்ற யானை பிடிக்கும் தள பாடங்களுடன் வெளிச்சென்று குமுழமுனையிலுள்ள கொட்டுக் கிணற்றடி விநாயகரை வணங்கிவிட்டுக் காலடி வைத்தபோது, புடையன் பாம்பு ஒன்று குறுக்கறுத்து வழிமரித்துக் கிடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகதம்பிரானை வழிபடவே பாம்பு வழிவிட்டது. சென்ற அரியாத்தை கண்டல் என்னும் இடத்தை அடைந்தாள். அரியாத்தையைக் கண்டு கோபங்கொண்ட யானை துதிக்கையை உயர்த்தியவாறு அரியாத்தையை நோக்கி ஓடிவந்தது ''ஆதி. ஐயனறிய ஒன்றும் செய்யாதே'' என்று அரியாத்தை சத்தியம் செய்யவே, யானை துதிக்கையை உயர்த்தி முட்டுக்காலிலிருந்து தலை தாழ்த்தி வணங்கியது. இதுதான் சமயமென அரியாத்தை வார்க்கயிற்றைக் கொளுவிப் பின்னர் பண்டாரவன்னியன் வளவு என அழைக்கப்பட்ட இடத்தில் குமுழமுனையில்) யானையைக் கட்டினாள்.

சின்னவன்னியன் அரியத்தையின் வீரத்தைப் புகழ்ந்து பாராட்டிப் பரிசளித்து விருந்தளித்துக் கௌரவித்தான். விருந்தின் முடிவில் யாரோ ஒரு பணிக்கன் அவமான உணர்வில் வெற்றிலையில் நஞ்சைத்தடவிக் கொடுக்கவே ஒன்றுமறியாத அரியாத்தை அதை உண்டு சிறிது வேளையில் மயங்கிவிழுந்து இறந்து விட்டாள். யானைக்குக்கிட்ட நெருங்க யாருக்கும் முடியாததினால் கட்டிய இடத்திலேயே அது மாண்டுவிட்டது.

---

"மண்ணின் மைந்தர்கள் மனக்கருவில் கருக்கொண்டு உருப்பெற்று உலாவரும் உள்ளத்தின் உண்மையான வெளிப்பாடுகளே நாட்டார் வழக்கியலிலுள்ள நாட்டார் பாடல்கள், நாட்டுப்புறப் பாடல், நாட்டுப்பாடல், நாடோடிப்பாடல், வாய்மொழிப் பாடல், கல்லாதார்பாடல், மக்கள்பாடல், பாமரர் பாடல், காற்றிலே மிதந்தகவிதை, ஏட்டில் எழுதாக் கவிதை, வனமலர். மலையருவி. கிராமத்துக் குயில், காட்டுப்பூக்கள் என்றெல்லாம் நாட்டார்பாடலை அழைக்கின்றனர்."

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பாரியில் வீராங்கனை வரலாறு

5

## (அ) தமிழக- ஈழத்தமிழகத் தொடர்பும் யானையின் பயன்பாடும்

வன்னிநாடு யானைக்குப் பெயர்போன பிரதேசமாகும். இலங்கை இந்தியத் தொடர்புகள் யானை முலமாக நெருக்கமாக இருந்திருக்கின்றன. ஒல்லாந்தர் ஆட்சியின்போது வன்னியிலிருந்து திறையாக யானையும். யானைத் திரவியங்களும் ஏற்று மதி செய்யப்பட்டுள்ளன. இங்குள்ள யானைகளைப் பிடிப்பதற் குத் தேர்ச்சிபெற்ற 'பணிக்கர்கள் இந்தியாவின் கோளப்பிரதேசத் திலிருந்து குடியேறியிருந்தார்கள். 'பணிக்கர்' (மலையாளம்.) யானைப்பாகன், படைக்கலம், பயிற்றுவோன் என Tamil Lexicon ல் கூறப்படுகிறது. இவ்வாறன பணிக்கர் பரம்பரை யினரே முள்ளியவளைப் பற்றிலுள்ள குமுழமுனை. செம்மலைப் பகுதியில் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் சந்ததியில் வந்த வளே அரியாத்தையாவாள்.

வன்னிக்கும் இந்தியாவுக்கும் உள்ள சகல தொடர்புகளுக்கும் இந்தியாவின் தொண்டித் துறைமுகம் சரித்திரப்பிரசித்தி பெற்று இருக்கிறது. இங்குள்ள பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கும், அங்கிருந்து இறக்குமதி செய்வதற்கும் உபயோகித்த துறைமுகம் 'தொண்டி' ஆகும். இவ் ஒப்பாரிப்பாடல்களில் வரும்

'தொண்டியால் கொண்டுவந்த எங்களையாளும்
சின்னவன்னியார் பெண்சாதி- அவ
தூய வர்ணப் பட்டுமொன்று'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற அடி உறுதி செய்கின்றது. இந்தியாவிலிருந்து வன்னியருக்குத் தேவையான புடவைகள் அங்கிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதை அறியக்கூடியதாகவுள்ளது. தொண்டித் துறைமுகம் எங்கே அமைந்திருந்தது என்பது பற்றி பின்வருமாறு அறியக்கூடியதாகவுள்ளது.

★ சேரகுலத்தோர் 'வங்கவீட்டத்துத் தொண்டி யோரிட்டவகிலும்' சிலப் - ஊர்காண் - 107

★ சேரர் 'தொண்டியோர் பொருள்' - பதிற்று - 88

இவ்வாறு பழம் பெருமை வாய்ந்த துறைமுகமான தொண்டிக்கும் வன்னிக்கும் இடையில் தொடர்பு இருந்ததை இவ் ஒப்பாரிப்பாடல் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

வன்னிக்கும் தொண்டிக்கும் இடையில் முக்கிய ஏற்றுமதிப் பொருளாக யானைகள் இருந்திருக்கின்றன. உடுபுடைவைகள் அங்கிருந்து இங்கு முக்கியமாக இறக்குமதி செய்யப்பட்டிருந்திருக்கின்றன.

போக்குவரத்து வசதிகள், நவீன வாகனங்கள், பெரிய கைத்தொழிற்சாலைகள் இல்லாத அக்காலத்தில், மனித உழைப்புக்கும் அப்பால் நின்று உழைத்த உழைப்பாளி யானையாகும். மரங்களைக் கொண்டு செல்வதற்கும், மரங்களை வீழ்த்துவதற்கும், பெரிய பாரமான பொருட்களைக் கொண்டு செல்வதற்கும் உபயோகித்த மிருகம் யானையாகும். அவை மனித தேவைகளின் பெரும்பங்கை நிறைவேற்றிவைத்தன. இதனாலேயே அந்தமான் தீவில் யானை, மரத்தொழிலில் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.

யானை, அரசனின் நாற்படையில் ஒன்றாகவும் விளங்குகிறது. ஏன் மாலை கொடுத்து அரசரைத் தேர்ந்தெடுக்கும் சிறந்த நண்பராக, தெய்வமாக போற்றப்படுவதும் யானையே. இறைவனுடன் தொடர்புபடுத்தி இந்துக்கள் வழிபடுவதும் யானையே. கோயில் உற்சவங்களில் தெய்வங்களைச் சுமந்து செல்வதாகவும், அரசனைச் சுமந்து செல்வதாகவும் விளங்குவது யானையே: யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானையின் தந்தம் உலகளாவில் பெரும் பெறுமதியுடையது. யானை மயிரை, மக்கள் தமது 'காக்கும்' ஒரு சின்னமாக அணிந்து கொள்வார்கள். இவ்வாறு மனித சமுதாயத்திற்குத்தேவை யான பெறுமதி வாய்ந்த யானை வன்னியில் சிறந்து விளங்கி யது. அப்பிரதேசத்தின், ஏன் ஈழத்தமிழகத்தின் சிறப்பாகும். இது வரலாற்றிலும் இடம் பெற்றுவிட்டது.

வன்னியிலுள்ள சிற்றரசர்கள் திறையாக யானைகளைக் கொடுத்தனர். பின்வரும் வரலாற்றுக் குறிப்புக்கள் இதனை உறுதி செய்கின்றன.

| | வன்னி | வன்னிபம் | திறை |
|---|---|---|---|
| 1. | பனங்காமம் | நல்லமாப்பாணன் | 11 ½ |
| 2. | விளாங்குளம் | நல்லமாப்பாணன் | 4 ½ |
| 3. | பரந்தன்வெளி | நல்லமாப்பாணன் | 2 |
| 4. | மேல்பற்று முள்ளியவளை | குட்டிப்பிள்ளை | 8 ½ |
| 5. | கரிகட்டுமூலை | சியாந்தனர் | 7 |
| 6. | கருநாவல்பற்று, புதுக்குடியிருப்பு | திரிகயிலை வன்னியனார் | 7 |
| 7. | தென்னமரவடி | சியாமராத்தை (தேசாதிபதி வான் கூன்ஸ் 9. 11. 1679) | 7 |
| 1. | பனங்காமம் | தொன்பிலிப்பு நல்லமாப்பாணன் தொன் கஸ்பானு இலங்கை நாராயணன் | 17 |
| 2. | கரிக்கட்டுமூலை | தொண்டியாகோ புவி நல்லமாப்பாணன் | 7 |
| 3. | மேல்பற்று | ,, | 5 |
| 4. | கருநாவல்பற்று | தொன் அம்பலவாணர் | 4 |
| 5. | தென்னமரவடி | சேதுகாவல மாப்பாணன் | 2 |
| 6. | முள்ளியவலை | தொன்பெருமையினார் (கெந்திரிக் ஸ்வாதிக்காரன், யாழ் பட்டின தலைமையதிகாரி 1697) | 3 ½ |
| 1. | தென்னமரவடி | சேதுகாவல மாப்பாணன் | 1 |
| 2. | பனங்காமம் | ,, | 16 |
| 3. | மேல்பற்று | அமரக்கோன் முதலியார் | 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 4. | முள்ளியவளை | அமரக்கோன் முதலியார் | 8 |
| 5. | கரிக்கட்டுமூலை | அழகேசன் புவிநல்ல மாப்பாணன் | 7 |
| 6. | கருநாவல்பற்று | ,, | 4 |

(தேசாதிபதி கூரேய்டர் – (1762)

இவ்வாறு வரலாறுகளைப் புரட்டிப் பார்க்கும் பொழுது வன்னி நாடு யானை வளம் பொருந்திய நாடாக இருந்ததும், யானைக்குப் பெயர் பெற்ற பிரதேசமாக இருந்ததும் உறுதியாகின்றது. இந்த யானை வளம் மிகுந்த வன்னிப்பிரதேசத்தில் யானையைப் பிடிக்கும் தொழிலை மேற்கொண்ட இனமே பணிக்கர் குலமாகும். 16, 17-ம் நூற்றாண்டிலேயே கூடுதலாக யானை பிடிக்கும் நடவடிக்கை மிகுந்த காலமாக இருந்திருக்கிறது. சின்னவன்னியன் வாழ்ந்தகாலம் பண்டாரவன்னியன் காலத்திற்கு முந்தியதான 17 ஆம் நூற்றாண்டிலேயே சின்னவன்னியன் வாழ்ந்தகாலமாகவும், வேலப்பணிக்கன் வாழ்ந்த காலமாகவும் இருந்திருக்கவேண்டும் என்று கொள்ளலாம்.

## (ஆ) மதம் கொண்ட வேழத்தின் அடங்காமை

வன்னிப் பிரதேசத்திலே யானைகள் அதிகமாகக் காணப்பட்டதனால் குக்கிராமங்களினூடு சென்று குடிமக்களை துன்புறுத்துவதும், பலன்தரும் மரங்களை அழிப்பதும் சாதாரண நிகழ்ச்சியாக இருந்தது. அவ்வேளையிலே குடிமக்கள் யானைகளைத் துரத்தித் தம்மைப் பாதுகாத்துக் கொள்வார்கள். ஆனால் ஒரு மதயானை எவருக்கும் கட்டுப்படாமல் கிராமத்தைத் துன்புறுத்தியது. அதனை அடக்கவோ. பிடிக்கவோ யாராலும் முடியாதிருந்தது. அந்த யானையைக் கவிசேகரன் அரியான் பொய்கை திரு கை. செல்லத்துரை அழகாகத் தமது கற்பனை வளத்தினால் பின்வருமாறு சித்தரிக்கின்றார்.

1 சொல்லக்கேளும் வன்னிமன்னனே
துன்பமெல்லாமிங்கு கூறவே.

2 அல்லல் ஒன்றிரண்டல்லவே
ஆனை செய்யும் அட்டகாசமே.

3 கொல்லை புலம் வயல் யாவுமே.
கூறுந்தரமல்ல நாசமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 தென்னை பனை பலா மாவெல்லாம்
சின்னாபின்னமாக வீழ்ந்ததே.
5 முன்னால் குவித்த நெற் போரெல்லாம்
முற்றாகத் தின்று முடிந்ததே
6 இன்றுமெங்கள் குடில் கொட்டில்கள்
எல்லாம் பிடுங்கியே வீசுதே.
7 நாங்கள் மிரட்டித்துரத்தவே
நம்மை நாடிச் சாடி ஓடுதே.
8 எத்தனைபேர் இறந்தார்களோ
எண்ணிக்கணித்தார் யாவரோ.
9 முத்து நிறைந்நீடு கொம்பனே
முற்றும் பரம்பும் சுணங்கனே.
10 சுத்த முளமதோர் ஏழதே
மத்தக மீத்தரை மீதிலே.

(வேழம்பதித்த வீராங்கனை – பக்கம் 20)

யானை பிடிக்கும் பணிக்கர்கள் வாயிலாகக் கூறுவதாகவுள்ள மறு பாடல்கள் :-

1

செல்லக்கேளும் வன்னி மன்னனே - இந்த
தொண்டு செய்வாரில்லைத் தீண்ணமே
வல்லதொருவருமில்லையே - மத
யானை படுத்திடல் தொல்லையே.

2

சொல்ல வொண்ணாத்துயர் தாங்கியே - சென்று
சோர்ந்து மடிந்தனர் எங்கியே
எல்லையுண்டோ இறந்துற்றவர் - இந்த
யானைமுன்னே கண்ணிற்பட்டனர்.

3

மந்திர தந்திர சாலமே - எங்கள்
மாயமெல்லாம் வெறும் சாலமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த விதத்துமடங்கிடா - திந்த
யானை யெவர்க்கு மொடுங்கிடா

4

நன்றோர நாம் சென்று மடிவதே - நாட்டில்
நமக்கில்லையே புவி வாழ்வதே
இன்றுநீர் எம்மீதிரங்கியே - எங்கள்
இன்னுயிர் காத்தருள் தாங்கியே.

5

அலைகடல் போலவே முழங்குமே - அந்த
அதிர்ச்சியில் அண்டம் நடுங்குமே
மலையெனவே முழம் ஏழதே - அதன்
மத்தகம் இத்தரை மீதிலே.

6

மேனி முற்றுபடர் சுணங்கனே - அதை
மேதினியின் கண்டோர் மிணங்களே.

(வேழம்படுத்த வீராங்கனை - பக் 32)

இம்மதயானை குறித்து ஒப்பாரிப்பாடலிலே வருவது :-

'நாகன் தீருக் கோவிலிலே என அஞ்சுகலை
நஞ்சையுண்ட ஞ்சாத ஐங்கரனே அப்பரே ஆத
ரவே அங்கே நிற்குதாம் நல்ல கொம்பன்'

'எங்களாள் ஆகாது எங்களையாளும் சின்னவன்னி
யனாரே - அது ஏழுமுழ யானையல்லோ.'

'அது கோபமுள்ள யானையது
எங்களையாளும் சின்னவன்னியனாரே - அது
குளறுதே மாமுகில் போல்'

மேற்கூறிய பாடல்கள் முலமாக மதயானையின் தோற்றத்தையும், கொடூரத்தையும், வேழத்தின் அடங்காமையையும் புரிந்துணர்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (இ) மதயானையை அடக்க முயற்சிகள்

மதம் கொண்ட யானையின் சிற்றத்திற்குட்பட்ட குடிமக்களின் கோரிக்கையை நிறைவேற்ற அரசன் சின்னவன்னியன் நடவடிக்கை எடுத்தான். அப்பொழுது யானை பிடிப்பதற்கு ஏழு ஊர்களிலே பணிக்கர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதை இவ் ஒப்பாரியில் வரும் பாடல் காட்டி நிற்கின்றது. ஏழு ஊர்களிலும் 'வேலப்பணிக்கன்' சிறந்த வீரனாக இருந்திருக்கின்றான். எல்லாப் பணிக்கர்களையும் அழைத்து யானையைப் பிடிக்க முயற்சி செய்தான்.

'ஏழு ஊருப் பணிக்கருக்கும் என்
அஞ்சுகலை நஞ்சையுண்ட ஐங்கரனே
அன்பரே ஆதரவே - அவர்
எழுதிவிட்டார் ஓலைதனை,

'எல்லாப்பணிக்கருமாய் இன்பமுடன்
தான்நடந்து அன்புடன் நீங்கள் சென்று - அந்த
ஆனைக்கட்டி வாருமென்றார்.'

அப்பொழுது எல்லாப்பணிக்கரும் வேலப்பணிக்கனைச் சிறந்த வீரன் என்று எடுத்துக்காட்டுவதற்கு ஆதாரமாக

'இந்த ஆனை கட்டிவர
எங்களை ஆளும் சின்ன வன்னியானரே - எங்களால்
ஆகாது வேலப்பணிக்கனால் ஆகுமென்றார்.'

இவ்வாறு வீரமுடைய வேலப்பணிக்கனால் கூட அந்த மத யானையைக் கட்ட முடியவில்லை. ஆனால் அவன் மனைவி அரியாத்தை அந்த யானையைக் கட்டுவித்தாள். அவள் வீரத்தைப் பணிக்கரும் அறிந்திருந்தனர்.

''அதிலொருவன் நின்றுகொண்டு. வேலப்பணிக்கனால் ஆகாது வேலப்பணிக்கன் பெண்சாதியினால் ஆகுமென்றார்.''

இவ்வாறு ஏனைய பணிக்கர்கள் சேர்ந்து வேலப்பணிக்கனைக் கூறியதால் மனமுடைந்து வீடு சென்று மனைவியிடம் நடந்ததைக்கூறும் பொழுது. அவள் கூறிய வார்த்தைகள் வீராங்கனைக்குரிய அவளின் குணாதிசயங்களைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இத்தனைக்கோ நீர் சலித்தீர்
என்னுயிரே ஆண்டவனே - எழும்பி
நீர் சாப்பிடென்றாள்.'

(ஈ) வீராங்கனை அரியாத்தை
யானையை அடக்குதல்

தன் கணவன் வேலப்பணிக்கனின் ஒப்புதல் உத்தரவு பெற்று மதயானை முன்பாக அரியாத்தை செல்கின்றாள். இதனை ஒப் பாரி இலக்கியம் சிறப்பாகத் தெளிவாக எடுத்து விளம்புகிறது.

வாற பொழுதிலையோ ஆனையது
மும்மதமும் தான் பொழிந்து
கை மடித்துத் தான் குளறி - அரியாத்தை முன்பு
கொம்பன் வந்து நின்றதுவே.

யானையைக் கண்டவுடன்
வேலப்பணிக்கன் பெண்சாதி - அரியாத்தை அவ
கால் கை தடுமாறி நின்றாள்.

பாலை மரம் வீரை மரம்
வேலப்பணிக்கன் பெண்சாதி - அரியாத்தை அவ
படி மரத்தோடு நின்றாவே.

காலாலே மண்ணை அள்ளி
தந்த விரப்பத்தீரனே
மால் மருக வேல் முருக - உன்
தஞ்சம் என் முன் போட்டாள்.

கற்புடையாள் நானாகில்
ஆனையடி ஆனையடி
ஆணமறிக்காறன் முகள்
ஆனை மயில் வாகனமே - உன்
கையைத் தான் நீட்டுமென்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மொழி கேட்டவுடன்
ஆனையடி ஆனையடி
ஆனை மறிக்காறன் மகள்
ஆனை மயில் வாகனமே - உன்
ஆனை கையைத் தான் நீட்டியதே.

கையாலே கை பிடித்து
அஞ்சகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே - அதன் மேல்
கொடு முத்தல்லவோ.

காலிலிரு தேமலல்லோ
யானையடி யானையடி
யானை மறிகாறன் மகள்
ஆனை மயில் வாகனமே - உனது
காலிரண்டும் நற்தேமலல்லோ.

பொல்லை எடுத்தல்லவோ
வேலைப் பணிக்கன் பெஞ்சாதி - அவ
போட்டாளே ஆனை முன்பு.

பொல்லை எடுத்து என் கையிலே
ஆனை மத யானையது
வேலப்பணிக்கன் பெஞ்சாதி
நாச்சன் அரியாத்தை கையில்
பொற்புடனே தான் கொடுக்க.

உன் காலைத் தா தா கந்தா
ஆனையடி ஆனையடி
ஆனை மறிக்காறன் மகள்
ஆனை மயில் வாகனமே - நானும்
கனத்த வடம் போட்டு இறுக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னங் கால் தான் கீழப்பி
வேலைப் பணிக்கன் பெஞ்சாதி
நாச்சன் அரியாத்தைக்கு
முடுக்கிட்டு நின்றதுவே.

மான் வாற் கயிறு எடுத்து
வேலப்பணிக்கன் பெஞ்சாதி - அவ
மனங் குளிர போட்டிறுக்கி.

முன்னங் கால் முடக்கு கந்தா
ஆனையடி ஆனையடி
ஆனை மத யானையடி
ஆனை மறிக் காறன் மகள்
ஆனை மயில் வாகனமே
நானடியாள் பெண் பேதை - உன்
குப்பத்தில் பாய்ந்து ஏற.

முழங்காலைத் தான் மடிக்க
வேலப்பணிக்கன் பெஞ்சாதி - அரியாத்தை அவ
முன்னே நின்று தோள் பிடிக்க.

உக் கோட்டைத் தா கந்தா
ஆனையடி ஆனையடி
ஆனை மறிக்காறன் மகள்
ஆனை மயில் வாகனமே
வேலப் பணிக்கன் பெஞ்சாதி - யானையிட
குப்பத்தில் ஏறினாளே.

செவியைத் தா கந்தா
ஆனையடி ஆனையடி
யானை மத யானையடி
ஆனை மறிக் காறன் மகள்
ஆனை மயில் வாகனமே
நானடியாள் பெண் பேதை
துறட்டிதனை போட்டிறுக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவியைத் தான் கொடுக்க
துறட்டிதனை போட்டிறுக்கி
வேலப் பணிக்கன் பெஞ்சாதி அரியாத்தை அவ
செப்பினாள் ஓர் வசனம்.

இவ்வாறு தனது துணிச்சலினால், தனது கற்பின் மகிமையைப் பயன்படுத்தி மதயானையை வீழ்த்தி, வீராங்கனையாகினாள். இதனால் கற்பின் மகிமையையும் வெளிக் கொணரும் வீராங்கனையாகின்றாள்.

## (உ) அரசனின் பாராட்டும் பரிசில்களும்:

அப்போதைய அரசர்கள் சாதனை புரியும் வீரர்களைக் கௌரவிக்கும் முறை இருந்தது. எவராலும் அடக்க முடியாத யானையை அடக்கிய அரியாத்தையை அரசன் கௌரவித்தான். இன்னும் மேலான சிறப்பொன்றை இப்பாடலிருந்து காணமுடிகின்றது. கௌரவம் பெறுபவர் வீராங்கனையாக இருப்பதால் அரசியும் சேர்ந்து கௌரவித்தாள்.

''பந்தலுமோ போடுவித்தார்
எங்களையாளும் சின்ன வன்னியனார் - நில
பாவாடை போடுவித்தார்''

''வெள்ளை விரும்பித்தாளே
எங்களையாளும் சின்னவன்னியனார்
பெண்சாதி அரியாத்தை தான் இருக்க
மேலாப்பு போடுவித்தாள்''

''பெட்டகத்தை தான் தீறந்து
எங்களையாளும் சின்ன வன்னியனார் பெண்சாதி
எடுத்துதர பட்டுவர்க்கமதை''

''கண்டியால் கொண்டு வந்த
எங்களையாளும் சின்ன வன்னியனார்
பெண்சாதி - ஒரு
கண்ணறைப்பட்டுமொன்று''

(கண்டிக்கும் வன்னிக்குமிடையில் தொடர்பு இருந்துள்ளதைக் காட்டுகின்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபரணம் தான் போட்டு
வேலப்பணிக்கன் பெண்சாதி
நாச்சன் அரியாத்தைக்கு
அணியச் சிலம்புமீட்டு

வெற்றிலை பாக்குகளும்
எங்களையாளும் சின்ன வன்னியனார் பெண்சாதி
நாச்சன் அரியாத்தைக்கு
வெள்ளித் தட்டில் தான் கொடுத்தாள்.

பதினெட்டு வரிசைகளும்
எங்களையாளும் சின்ன வன்னியனார் பெண்சாதி
நாச்சன் அரியாத்தைக்குப்
பாங்குடனே அசை கொடுத்தாள்.

## (ஊ) சூழ்ச்சியின் வரிசையில் அரியாத்தை

அரசமரியாதையுடன் கௌரவிக்கப்பட்ட வீராங்கனை அரியாத்தை திடீரென மயங்கி இறந்தாள். இவள் இறந்ததற்குரிய சரியான காரணம் பாடலில் திடமாகக் கூறப்படவில்லை. கர்ண பரம்பரைக் கதையில் வெற்றிலையில் நஞ்சைப்பூசி யாரோ ஒரு பணிக்கன் பொறாமை காரணமாக ஆண்களுக்கு. அவமானம் தேடித்தந்தவள் என்ற காரணத்திற்காக நஞ்சைக் கொடுத்து சாகடித்தான் எனக்கூறப்படுகின்றது. அரியாத்தையைக் கௌரவித்த பின் உள்ள பாடல்களை நோக்கும்போது இது பற்றிய சர்ச்சைகளுக்கு விடை காண முடியும்.

வீட்டே நான் போறேன் காண்
என் நயிந்தை ஆண்டவனே - நீரும்
விரைவாக வந்து விடும்.

நடந்து சுறுக்காயல்லோ
வேலப்பணிக்கன் பெண்சாதி - அவ
நடுவழியில் வருகையிலே.

வழியில் வருகையிலே வேலப்பணிக்கன் பெண்சாதி
நாச்சன் அரியாத்தைக்கு
வத்ததே பெரும்துயரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணும் கடிக்குதையோ
என் ஆதீ பராபரமே
ஆறுமுக வேலனே - என்னுடைய
கால்கள் மிகச் சோருதையோ.

கண்ணும் மயங்குதையோ
வேல்முருகா மால் மருகா
வேல் முருகா வேலோனே - எனக்குக்
கனத்ததுயர் காணுதிப்போ.

வாயும் வறளுகிதிப்போ
வல்லிபுர மாயோனே
நல்லநகர் வேலோனே - என்னுடைய
வாணாள் உருகுதிப்போ.

நடக்கவே கூடுதில்லை
நாரணரே காரணரே
நாகதம்பிரானாரே - எனக்கு
நடக்கவே கூடுதில்லை,

வீடுதான் போய்ச்சேர
மான் மகனார் வள்ளிபர துங்கா
வேல்முருகா குரதூரங்கா - எனக்கு
வழியோ தெரியவில்லை.

என்ற பாடல் மூலம், பதினெட்டு வரிசைகளுடன் கௌரவம் பெற்ற வள், வீடு திரும்பும்போது தான், இவள் இறப்பதற்குரிய ஏதோ ஒரு காரணம் ஏற்பட்டிருக்க வேண்டும். இக் காரணம் சரியாகத் தெரியாது என்பதைப் பின்வரும் பாடல்கள் மூலம் உறுதி செய்யலாம்.

''யானை கட்டப் போனடத்தே
ஆதரவே ஆருயிரே
ஆசைமட மாமயிலே - உனக்கு
ஐயம் காச்சி பட்டதுவோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்குப் பேய்தான் பிடித்ததுவே
என்பேர் பெரிய நாயகியே
தீர் உடைய தேவியரே - உனக்குப்
பெல்லிப் பேய் விட்டினமோ''

எனவே அரியாத்தையின் இறப்புக்குரிய சரியான காரணம் என்ன என்பது கேள்விக்குரியதாக இருக்கின்றது.

## (எ) கற்புடைய வீராங்கனை

அரியாத்தை தனது வீரத்தின் சாதனையை தனது கற்பு வீரத்தின் மூலம்தான் சாதித்தாள் என்பதை இப்பாடல்களின் பல இடங்களில் காணமுடிகின்றது. ஒரு சில உதாரணங்கள் மூலம் இதை நிருபிக்கலாம்.

அரியாத்தை யானை கட்டச் செல்லும்போது யானை ஒன்று மறிக்கின்றது. அந்த இடத்திலே அவள்.

''பத்தினியாள் நானாகில்
எகபராபரனே நாகதம்பிரானாரே - எனக்கு
நற்கிருபை தாருமென்றாள்''

எனக்கூற அந்த நாக பாம்பு

''அரியாத்தை தான் தொழவே
அன்புடனே ஆனை கட்டி
இன்பமுடன் வாருமென்று - முன்னிருந்த
புற்றதனில் நாகம் அடங்கியதே''

என்றவாறு நல்ல பாம்பு வழிவிட்டுக் கொடுத்தது.

அரியாத்தை இறந்த பின்பு ஆற்றாத துன்பத்தால் அவளுடன் உடன் கட்டை ஏறுவதற்காக வேலப்பணிக்கன் முனைகின்றான். அதையறிந்த மக்கள் அவனை ஒரு இடத்திலே கட்டிவிட்டு அரியாத்தையின் உடலை எரிப்பதற்காக எடுத்துச் செல்கின்றனர். அப்போது வேலப்பணிக்கன் கட்டப் பட்டுத் துன்பப்படும் வேளையில் பின்வருமாறு கூறுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கற்புடையாள் நீராணால்
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - என்னுடைய
கையில் கட்டுத் தெரியாதோ.''

அப்போது

''கலங்கியழும் பொழுது வேலப்பணிக்கனுடைய
கைக்கட்டு தெரித்தீட்டதே''

அவனுடைய கட்டுகள் அறுந்திடவே வேலப்பணிக்கன் அரியாத்தை யுடன் உடன் கட்டை ஏறினான். இவ்வாறு பல உதாரணங்களால் அரியாத்தையின் கற்பு மேலோங்கி நிற்கின்றது. இதுவும் அவளை ஒரு வீராங்கனையாக்குவதற்குரிய காரணங்களில் ஒன்றாக விளங்குகின்றது.

---

"கதைப்பாடல்கள் மக்களை மகிழ்விக்கும் வாய் மொழிக் காப்பியங்களாகும் ஆகவே காப்பியங்களில் இடம்பெறும் கூறுகள் இக்கதைப் பாடல்களிலும் இடம் பெற்றுள்ளன. காப்பியங்கள் தனி ஒருவனின் கதையைக் கூறுவதுபோலவே, இக்கதைப் பாடல் களும் தனியொரு தலைவனின் தலைவியின் கதை யையே பாடுகின்றன. கதைப்பாடல் தலைவர்களின் பாத்திரப்படைப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்று காண்பது நம் கடமையாகிறது."

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலப்பணிக்கன் ஒப்பாரியில் சமூகப்பண்பாட்டுச் செய்திகள்

6

## (அ) சகுனம் பார்த்தல்

நம்பிக்கைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் முதலிய நாட்டார் வழக்காறுகள் மிகவும் பரந்துபட்டவை. நாட்டார் கலாசாரத்தில் பெரும்பகுதியை உள்ளடக்குபவை. அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணப்பதிவுகளையே நம்பிக்கைகள் எனலாம். இந்தவகையில் சகுனம் பார்த்தலும் அவர்கள் வாழ்வில் அன்றாட நிகழ்ச்சியில் பெரிதும் இடத்தை வகித்து வந்துள்ளது ஏன்? இன்னும் அந்தநம்பிக்கையைக் கடைப்பிடித்து வருவதைக் கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஒரு நல்ல காரியத்தைச் செய்யும்போது அல்லது நல்ல காரியத்துக்குச் செல்லும் பொழுது எற்படும் முழுவியளம். குறுக்கிடும் நிகழ்வுகள் என்பனவற்றைக் கொண்டு அவர்கள் எண்ணும் காரியம், செல்லும் நோக்கம் நிறைவேறுமா? நிறைவேறாதா என்பதை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் வகையில் சகுனம் கொண்டு தீர்மானிக்கும் நம்பிக்கையைப் பெற்றார்கள். அதில் நம்பிக்கையை வைத்திருந்தார்கள்.

வேலப்பணிக்கன் ஒப்பாரியில் வரும் பாடல்கள் மூலம் அதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

பத்தையிலே பல்லியொன்று என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே அது பல பலனென்று சொல்லுதே

செத்தையிலே பல்லியொன்று என்னுயிரே கண்மணியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கிணங்கும் நாயகியே அது தீடு கூறாய்
சொல்லுகுதே.

கண்ணும் துடிக்குதிப்போ
எங்களை ஆளும் சின்ன வன்னியனாரே - எனக்கு
கனத்த குறி காணுதிப்போ.

செத்தையிலே பல்லியொன்று
என் ஆசை அவுறுகமே
ஆசை மச்சாள் தோழியரே அது
தீடு கூறாகச் சொல்லுகுதே

## (ஆ) வீரர்களை கௌரவித்தல்

அரசனின் ஆளுமையில் படைகள் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கின்றன. இப்படைகளில் வீரர்கள் சிறந்த பணியாற்றிச் சிறந்த அரசுக்கு மூல வேராக இருந்திருக்கிறார்கள். இதனால் அரசர்களுக்கும். வீரர்களுக்கும், அந்நியோன்ய உறவுகள் இருந்திருக்கின்றன. நாட்டின் பெருமையைத் தேடித்தரும் வீரர்களைக் கௌரவிக்கும் பழக்கம் அக்காலத்தில் அரசர்களுக்குண்டு. இதை இவ்வொப்பாரி இலக்கியத்தில் காணக்கூடியதாகவுள்ளது, இது பற்றி எற்கனவே பாடல்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

## (இ) திருமணம்

அக்காலத்தில் திருமணம் ஐந்து வயதிலே நடைபெற்றுவிடும், இது இந்திய சமுகத்தில் உள்ள முறைமையாகும். இம்முறைமை வன்னிப் பிரதேசத்தில் வாழ்ந்த பணிக்கர் குலத்திடமும் இருந்திருக்கின்றது. இதை இவ் ஒப்பாரி இலக்கியத்தில் வரும் பாடல் அத்தாட்சிப் படுத்துகிறது.

"ஐந்து வயதிலையோ
என் நயிந்தை ஆண்டவனே - நீரும் என்னை
அன்பாய் மணம் முடித்தீர்."

## (ஈ) பில்லி, பேய், சூன்யம்

அக்காலத்தில் சமுகத்தில் தீடீர் இறப்பு நேரிடும் பொழுது அவ் இறப்புப்பற்றிப் பலவாறு கற்பனை செய்து கொள்வார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சுகொடுத்தல் பில்லிபேய் விடுதலை, பேய்பிடித்தல், மருந்து போடுதல் போன்ற காரணங்களைச் சொல்லிக் கொள்வார்கள். இன்றும் பல கிராமங்களில் இவ்வாறு நம்பிக்கொள்வதும். மந்திரவாதியைக் கொண்டு மருந்து செய்வதும் நடைமுறையில் உள்ளது. இதனை இவ் ஒப்பாரி இலக்கியமும் காட்டிநிற்கின்றது.

உனக்குப் பேய்தான் பிடித்ததுவோ
என்பேர் பெரிய நாயகியே
சீர்உடை தேவியரே - உனக்குப்
பெல்லி பேய் விட்டினமோ.

யானை கட்டப் போனடத்தே
ஆதரவே ஆருயிரே
ஆசைமட மாமயிலே - உனக்கு
ஐயம் காச்சி பட்டதுவே.

என்னும் பாடல்கள் அக்காலத்தில் பெல்லிபேயில் வைத்திருந்த நம்பிக்கையுடன் மட்டுமல்லாது தீடீர் இறப்புக்கு அறிவு நிலைக்கு அப்பால் நின்று, காரண காரியத்தை அறியும் நிலையையும் காணக்கூடியதாகவுள்ளது.

## (உ) கணவன் உடன்கட்டை ஏறுதல்

கணவன், மனைவி, காதலன் இறப்பினைச் சகிக்க முடியாமல் மனைவி அல்லது காதலி உடன்கட்டை ஏறுவதையே இலக்கியத்தில் நாம் கற்றுக்கொண்டோம். ஆனால் மனைவி இறந்தவுடன் அவள்மேல் வைத்த பாசத்தால், அப்பால், பிரிந்து வாழ முடியாது உடன்கட்டை ஏறிய கணவனை இவ்விலக்கியத்திலே காணமுடிகிறது.

என்று சொல்லித் தானுமப்போ
வேலப்பணிக்கர் அவர்
ஏங்கி தம் வாடி
அக்கினியைச் சுற்றி வந்து
என்னுயிரே கண்மணியே
எனக்கீணங்கும் நாயகியே - நீரும்
அன்பாய்க் கையைக் தாருமென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செத்த பிணந்தானெழும்பி
வேலப்பணிக்கர் பெண்சாதி - அவ
தீட்டமாய்க் கை கொடுத்தாள்

செத்து மடிந்தார்கள்
வேலப்பணிக்கரும் பெண்சாதியும் - அவ
சிவலோகம் சேர்ந்தார்கள்.

---

"மனித இன் வரலாற்றில் பெயர் மிகவும் முக்கிய மான இடத்தைப் பெறுகின்றது. ஒரு மனிதனை மற்றொரு மனிதனிடமிருந்து வேறுபடுத்திக் காட்டு வது பெயராகும். பெயரைக் குறியீடாக மட்டும் கருதுவதில்லை. அது மனிதனின் ஆளுமையையும் இயல்பையும் காட்டுவனவாக மட்டுமின்றி சமூதாயத் தின் பழக்கவழக்கங்கள் நம்பிக்கைகள், பண்பாடு முதலியன வற்றை வெளிப் படுதுவனவாகவும் உள் ளன. பெயர்கள் வழமை எச்சங்களாக நின்று மனித வரலாறையும் பண்பாட்டையும் பிரதிபலித்து நிற் கின்றன"

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலப்பணிக்கன் ஒப்பாரி இலக்கியத்தின் சிறப்பு 7

வேலப்பணிக்கன் ஒப்பாரி இலக்கியத்தின் சிறப்பு பற்றி பல இடங்களில் தொட்டுக் காட்டப்பட்டுள்ளன. எனினும் இவ்விலக்கியத்தினை ஏனைய ஒப்பாரிப்பாடல்களுடன் ஒப்பிட்டு பார்க்கும் பொழுது இதன் சிறப்பு மேலும் ஓங்கி நிற்பதை அறிந்து கொள்ளலாம்.

கண்டியரசன் ஒப்பாரி கண்டிராசனான விக்கிரமராசசிங்கன் பூசணி என்ற பெண்ணின் பால் காதல் கொண்டு அழிந்த கதையினைக் கூறுகின்றது.

திருவளர் பூமாலை மார்பா என் சிங்கமகாராசாவே
கருவளரீங்கிலீஷாரும்மைக்கட்டவும் கனவுகண்டேன்
வாளுக்கரசே என் மன்னா மதுரைக்கு ராசாவே
போருக்கு வீரவே புறங்காட்டா பூபதியே
நீராளுஞ் செல்வமெல்லாம் அப்பொல்லாத
இங்கிலீசார்
தாராளமாக வந்து ஊராளக் கண்டேன்.

சின்ன இடையழகும் சிறந்த முகத்தழகும்
அன்னநடையழகும் அன்பாய்நான் காண்பதெப்போ
அழகாய்ப் பிறந்தயெந்தன் அருமைப் பூசணியே
யுன்னைக்
கண்ணாலே கண்டேன் கனசோட்டை
தீர்க்கவில்லை
என்னை மறந்து நீ எப்படித்தான் போனாயோ
தாழமுள்ள கங்கையிலே தனியாக விழுந்தாயோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன கண்டியரசன் ஒப்பாரியில் சில பகுதிகளாகும். மகன் பலியிடப்பட்டதைக் கண்ட தாய் ஆடு புலம்புவதாக அமைந்த சோமசுந்தரப்புலவர் பாடிய ஒப்பாரியில் ஒரு பகுதி.

ஆசை மகனேயென் அன்பான கண்மணியே
நேசத் துரையே நெடும்பயணம் போனாயோ
ஓராறு மாதம் உடம்பு நொந்து பெறறெடுத்த
சீராளா தெற்குத் திசைப்பயணம் போனாயே
அம்மா வெனவழைக்கும் ஆசைத் திருக்குரலை
எம்மா தவக் கொழுந்தே நான் கேட்பதெந்நாளோ
காக்கைக் கரைவும் கனாவும் பலித்ததடா
ஆக்கை துடிக்குதடா அடிவயிறு நோகுதடா.

ஒரு தாயின் புத்திர வாஞ்சை சோக உணர்ச்சியில் வெடித்தெழுகின்ற ஒப்பாரி.

ஐயோ மகனாரே
யாருக் குனை வளர்த்தேன்
குய்யோ குய்யோ எனுமுன்
குரல் பறந்து செல்லுகுதே.
நாளாய்க் கருத்தரித்து
நாள்வீதம் முட்டையிட்டு
ஏழ் முன்றிரவு பகல்
இரணமின்றிக் காத்தேனே
முதிரா இளஞ்சடலம்
முற்றாத முள்ளெலும்பு
சீதறப் பிடித்தேனே
சீர்கேடன் செம்பருந்து
..... .....
.....
பருந்துக் கொழுத்திருந்தும்
பறக்கும் செயலறியேன்
பாவிநான் உனைமீட்க
உன்நிலையைக் கண்டேங்கி
உயிர்மாய்க்கப் போகையிலுன்
அண்ணாமார்ின் பாசம்
அழுத்திப் பிடிக்குதையோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு ஒப்பாரிப் பாடல்களை நோக்கும்போது தனிச்சம்பவங்களைக் காட்டுவனவாகவே அமைந்து இருக்க வேலப்பணிக்கன் ஒப்பாரி ஒருவரலாற்றையே எடுத்துக்காட்டும் இலக்கியமாகவுள்ளது.

பாட்டு அமைப்பிலும் கதைப்பாடலுக்குரிய அம்சங்களைக் கொண்டு காணப்படுகிறது. கதைப்பாடல்களில் கூறிய அடி திரும்பவும் வரும் அமைப்பு முறையைக் கொண்டது. அதை இவ் ஒப்பாரி இலக்கியத்தில் காணலாம்.

அந்தகத்து கோவணத்தில்
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே நானும்
அறுதி என்று அனுப்பி விட்டேன்.
உன்னையுமே கொண்டவ ரார்
என்னுயிரே கண்மணியே
எனகிணங்கும் நாயகியே - நானும்
உடனே அறிந்தேனென்றால்...

இவ்வாறு கதைப்பாடலுக்குரிய அம்சத்தைக் கொண்டு விளங்குகிறது.

ஏனைய ஒப்பாரிகளில் ஒருவன், ஒருத்தி பாடுவதுபோல் அமைய. இவ் ஒப்பாரி இலக்கியத்தில் தலைவன், தலைவி இருவரின் எண்ணக் கருக்களும் இடம்பெறும் தனித்தன்மையைக் காணக்கூடியதாகவுள்ளது.

அரியாத்தை கூறியதுபோல்

"கும்பிட்டுத் தெண்டனிட்டு
என்நயிந்தை ஆண்டவனே - அங்கே
கொண்டு கொம்பன் முன்பு நின்றால்
அப்பல்லோ யானையது
என்நயிந்தை ஆண்டவனே - கந்தன்
அவிழ்க்கவல்லோ கால் கொடுப்பான்."

வேலப்பணிக்கன் கூறுவது போல்

"ஆயிரம் யானைப் பணிக்கர்
என் ஆசைக்கிளியே
அரிய கயிலாயமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன் தேன் மொழியாலோ - உன்னை
அனுப்பி விட்டார் என்னிடத்தில்."

என்றவாறு கதையைக் கூறும் பாணியில் ஏனைய ஒப்பாரியிலும் வேறான தன்மையைக் கொண்டு விளங்குகிறது.

இவ் ஒப்பாரி இலக்கியத்தில் வரும் உவமைப் பெயர்களும், விளிகுறிகளும் ஒப்பாரிப் பாடலை அழகு செய்வதுடன் வேலப் பணிக்கன் - அரியாத்தை பாசப்பிணைப்பைச் சித்திரிக்கும் தன்மையை மிகவும் கச்சிதமாக எடுத்துக்காட்டி நிற்கின்றன. இப் பாடல்களில் ஆங்காங்கே வரும் அரியாத்தையின் மறு உவமைப் பெயர்களாவன:.

கண்மணியே. நாயகியே. அன்னமே, ஆருயிரே, என் நயிந்தை அவுறுகமே, தோழியரே, சந்தனமே, ஆசைமயிலே, பெரிய நாயகியே, எனக்கிணங்கும் நாயகியே, ஆசைக்கிளியே, அரிய கயிலாயமே, பொன், தேன் மொழியாளே, பண்புபோலோவியமே, உத்தமியே, பக்தினியே, சித்திரமே, தேவியரே, வாலைப் புதுமயிலே, துணைவியரே, காரிகையே, பெண்ணரசே.

இதன் மூலம் இவ் ஒப்பாரி இலக்கியத்தைப் பாடிய புலவரின் மனதில் அரியாத்தை எவ்வாறு வீற்றிருந்தாள். அவளில் மதிப்பீடு எவ்வாறு வைத்திருந்தார் என்பதைக் கொண்டு அரியாத்தையின் சிறப்பை அறியக்கூடியதாகவுள்ளது.

எனவே ஏனைய ஒப்பாரி இலக்கியத்திலும் வேறான தன்மையில் அமைந்த இவ் இலக்கியப் பாடல்கள் இலக்கியத்தில் தனித் தன்மை பெறுவதுடன், இலக்கியத்தில் வரும் கதாநாயகி அரியாத்தையும் வரலாற்றில் தனித்தன்மை பெற்று வரலாறு சமைத்துள்ளாள்.

---

"நாட்டார் பாடல்கள் முன்னைப் பழமைக்கும், பழமையாய் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்குகின்றன. இப்பாடலின் படைப்பாளர்கள் இம்மண்ணின் மைந்தர்கள் வாயில் பிறந்து செவிதனில் உலவி காற்றில் மிதந்து கருத்தில் இனிப்பவை. என்று பிறந்தது என எடுத்துச் சொல்ல இயலாத பண்பும் பாங்கும் பெற்றவை."

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழரின் முதல் வீராங்கனை

8

ஈழவரலாற்றில் எத்தனையோ சாதனை படைத்த வீரர் வரலாறு உண்டு. ஆனால் வேலப்பணிக்கன் ஒப்பாரி இலக்கியம் காட்டும் வீராங்கனைபோல் வரலாற்றில் இல்லை. இவளுடைய வீரத்தினை ஒப்பாரியின் பின்வரும் அடி உறுதியாக நிரூபிக்கிறது.

"இன்னொருவன் நின்று கொண்டு
வேலப்பணிக்கனால் ஆகாது - வேலப்பணிக்கன்
பெண் சாதியால் ஆகுமென்றான்."

மன உறுதியை காட்டுவதில் வேலப்பணிக்கன்தான் சிறந்த வன் என பணிக்கர் எல்லோரும் கூற அதிலொருவன் வேலப் பணிக்கனால் ஆகாது வேலப்பணிக்கன் பெண் சாதியால் ஆகு மென்று கூறியதிலிருந்து அவளுடைய வீரத்தை பணிக்கர்களில் ஒருவன் எற்கனவே தெரிந்திருந்தான் என்பது வெளிப்படை. எனவே அவள் வீரமுடையவள்தான்.

அரியாத்தை தனது கற்பின் மகிமையால்தான் யானையைக் கட்டினாள் என்று சிலர் வாதிடுவார். அக்கூற்று மறுக்கப்பட்ட வேண்டியது. அவள் யானையைக்கட்டுவதற்குக் கற்பும் ஒரு பங் களிப்பைச் செய்ததே தவிர அதுமட்டும் அவள் வீராங்கனை யாவதற்குரிய தொன்றல்ல இதனை இவ்ஒப்பாரி இலக்கியத்தி னூடாக விளக்க முனைகின்றேன்.

"என்னைப்போல் கன்னியர்கள் என் நயிந்தை
ஆண்டவனே
எத்தனையோ தானிருப்பார்
என்னைப்போல் கற்புடையார் என் நயிந்தை
ஆண்டவனே
இந்த இலங்கையில் மெத்த உண்டு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வரும் பாடல்கள் மூலம் அப்போது பல கற்புடையவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பது புலப்படும். ஆனால் வீரமும் கற்பு முடைய பெண்கள் வேறு எவரும் அப்போது இருக்கவில்லை என் பதை பின்வரும் பாடல்கள் மூலம் உறுதிசெய்யலாம்.

அரியாத்தை சாவை அண்டிக்கொண்டிருக்கும்பொழுது; கட்டிய யானையை யார் அவிழ்ப்பது என்ற கேள்வி வந்தபொழுது அவள் பின்வறுமாறு கூறுகின்றாள்.

"யானைதனை அவிழ்க்க என் நயிந்தை
ஆண்டவனே என்னைப்போல்யாருமொரு கற்புடையாள்.
ஏழுசுருள் வெற்றிலையும், என்நயிந்தை ஆண்டவனே
எடுத்துமவள் கைபிடித்து
கும்பிட்டுத் தெண்டனிட்டுஎன் நயிந்தை ஆண்டவனே
அங்கே கொண்டு கொம்பன் முன் நின்றால்
அப்பல்லோ யானையது என் நயிந்தை ஆண்டவனே
கந்தன் அவிழ்க்கவல்லோ கால் கொடுப்பான்.

என்று அரியாத்தை வாயிலாகக் கூறியபோதும் அந்த யானையை அவிழ்க்க யாரும் செல்லாது, அந்தயானை அவ்விடத்திலே இறந்தது.

எனவே யானைக்கு அருகிலே செல்லக்கூடிய வேறு வீரர் களோ, கற்புடையவேறு பெண்களோ துணிச்சல் இன்றி கோழை களாகவே இருந்திருக்கிறார்கள். எனவே அரியாத்தைஒரு துணிச் சல் மிக்க வீராங்கனையே. அவளே ஈழத்தமிழரின் முதல் வீராங் கனை.

## உசாத்துணை ஆவணங்கள்.

1. வன்னியர் பக் 11 – கலாநிதி சோ. பத்மநாதன்
2. வன்னிமலர் – தமிழாராட்சி மகாநாடு மலர்
3. வேழப்படுத்த வீராங்கனை நாடகம் – அரியான் பொய்கை
4. வன்னிவள நாட்டுப்பாடல். செ. மெற்றாஸ்மயில் முல்லை இலக்கிய வெளியீடு
5. கண்டியரசன் ஒப்பாரி சரஸ்வதி புத்தகசாலை. செட்டியார்தெரு கொழும்பு.
6. வன்னிவள நாடுப்பாடல் பக்கம் XXV – கலாநிதி அ. சண்முகதாஸ்
7. மட்டக்களப்புத்தமிழகம் - வி. சி. கந்தையா – பக் 335.
8. இலங்கை தமிழ் நாட்டார் வழக்கியல் பக் 112. 272 பதிப்பாசிரியர் கா. சிவத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் இணைப்பு

வேலப்பணிக்கன் ஒப்பாரிப் பாடல்கள்
'நிலவுடமைச் சமுதாயத்தில் அரியாத்தை'
சிறப்புக் கட்டுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலப்பணிக்கர் ஒப்பாரி

இந்நூலாசிரியரால் ஏட்டிலிருந்து பெற்று பதிக்கப் பட்ட வேலப்பணிக்கன் ஒப்பாரிப் பாடல்களை பல வருடம் (1934) வைகாசி மாதம் 12 ஆம் திகதி கீழைக் கரையம்பதி வ. கணவதிப்பிள்ளை அவர்களால் வெளி யிடப்பட்ட நூலுடன் ஒப்பிட்டு பாடபேதங்களுடன் இலங் கைப் பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள் சீரில் அமைத்த பாடல்கள்.

நாகந் தீருக்கோவிலிலே - என்
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே - அங்கே
நிற்குதாம் நல்ல கொம்பன். 1

கண்டவுடன் வன்னியாருக்கு என்
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே - அதை
ஒரு காரணமாய்ச் சொன்னார்கள். 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்ன மொழி கேட்டவுடன் - என்
அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே அவர் - ஓர்
சுருள் இலை தானெடுத்து. 3

ஏழு ஊருப்பணிக்கருக்கும் என்
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே - அவர்
எழுதிவிட்டார் ஓலைதன்னை. 4

ஓலைதன்னில உள்ள செய்தி - என்
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே அரனே
ஐயனே தஞ்சமென்று வன்னியன் முன்
அன்புடன் வந்தார்கள், 5

வந்தவர்கள் தெண்டன் இட்டு - என்
அஞ்சுகலை நஞ்சுண்ட
அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே
வன்னிமறிகாறர் எல்லாம். 6

எல்லாப் பணிக்கருமாய்
இன்பமுடன் தான் நடந்து
அன்புடன் நீங்கள் சென்று - அந்த
ஆனை கட்டி வாருமென்றார். 7

அந்தமொழி கேட்டவுடன் - என்
அஞ்சுகலை நஞ்சுண்ட
அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே - பணிக்கமார்
ஆலோசனை பண்ணுவாராம். 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களாள் ஆகாது
எங்களையாளும் சின்ன வன்னியாரே - அது
ஏழு முழ யானை அல்லோ 9

அது கோபமுள்ள யானையது
எங்களை ஆளும் சின்ன வன்னியனாரே - அது
குளறுதே மாமுகில் போல் 10

இந்த ஆளை கூட்டிவர (எங்கள்)
எங்களைஆளும்சின்னவன்னியனாரே எங்களால் ஆகாது
வேலப்பணிக்கனால் ஆகுமென்றார். 11

அதிலொருவன் நின்று கொண்டு
வேலப்பணிக்கனால் ஆகாது - வேலப்பணிக்கன்
பெண்சாதியால் அகுமென்றன். 12

அந்தமொழி கேட்டவுடன் - என்
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே - வேலப்பணிக்கர்
அவசரமாய்த் தான் நடந்தார் 13

வீடுதனில் வந்து மெல்லோ
வேலப்பணிக்கர் - அவர்
வியாகுலமாய்தான் படுத்தார். 14

கண்டுமவள் ஓடிவந்து
என்நயிந்தை ஆண்டவனே
உமக்கு வந்த காரணத்தைச்
சொல்லும் என்றாள் 15

ஒன்று மொழியாமல்
என்நயிந்தை ஆண்டவனே - நீரும்
உள்ளபடி சொல்லுமென்றார். 16

யானையொன்று வந்ததென்று
என்னுயிரே கண்மணியே அதை அன்புடனே
கட்டிவரச் சொன்னார்காண். 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலொருவன் நின்றுகொண்டு
என்னுயிரே கண்மணியே - வேலப்
பணிக்கனால் ஆகுமென்றான். 18

இன் ஒருவன் நின்றுகொண்டு
வேலப்பணிக்கனால் ஆகாது - வேலப்பணிக்கன்
பெண்சாதியால் ஆகுமென்றான். 19

இத்தனைக்கோ நீர் சலித்தீர்
என்னுயிரே ஆண்டவனே, எழும்பி
நீர் சாப்பிடென்றாள். 20

பசியோதான் நீர் ஆறி
என் நயிந்தை ஆண்டவனே
உண்டியாள் பெண்பேதை - எனக்குப்
பரிவாய் விடைதாருமென்றாள். 21

யானைகட்டி வாறதற்கு
என்நயிந்தை ஆண்டவனே - எனக்கு
அன்பாய் விடை தாருமென்றாள். 22

ஆனைகட்ட நான் போனால் - என்
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதாரவே - நான்
ஒரு நாளையிலே வந்திடுவேன். 23

போய்வாறேன் என்றீரோ,
என்னுயிரே கண்மணியே
எனக்கு இணங்கும் நாயகியே - வெகு
பொல்லாப்புக் காணுகுதே 24

பத்தையிலே பல்லியொன்று
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - அது
பலபலன்று சொல்லுகுதே. 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செத்தையிலே பல்லியொன்று
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - அது
தீருகூறாய் சொல்லுகுதே. 26

நாளும் குணமல்லவோ
என்னுயிரே கண்மணியே
எனக்கு இணங்கும் நாயகியே - நீர்
நாளைக்குப் போமென்றார். 27

அன்றிரவு தங்கியெல்லோ
வேலப்பணிக்கர் பெண்சாதி - தன்
அன்பர் சொல்லைத் தட்டாமல். 28

காலம்பெற எழும்பி - என்
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே
தஞ்ச வீரபத்தீரனே - உன்
தஞ்சம் எனவே நினைத்து. 29

புதுப்பானை தானெடுத்து - என்
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாதே ஐங்கரனே
அன்பரே ஆதரவே - என்று
பொங்கி விட்டாள் காளியற்கு. 30

ஏழுசுறுள் வெற்றிலையும்
வேலப்பணிக்கர் பெண்சாதி - ஏழு
எலுமிச்சைங் காய்யும் தானெடுத்து. 31

மான்வாற் கயிறெடுத்து
வேலப்பணிக்கர் பெண்சாதி - அரியாத்தை அவ
வலதுகையில் பெலன்பார்த்தா. 32

யானைகட்டப் போறதற்கு - என்
ஆசைத்துரையே அரியதுரை மந்திரியே - எனக்கு
அன்பாப் விடை தாருமென்றாள் 33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானைகட்டப் போறேன் என்றீர்
அதிவீர பத்தீரனே ஐயோ எனப்பதை பதைத்து
வேலப்பணிக்கர் அவர்அழுதழுதோசொல்லுவாராம்34

நான்னிருக்க நீர்நடக்க... என்
ஆசை மனைவியரே
அன்னமே ஆருயிரே - எனக்கு
நன்றாய் இருக்கவில்லை. 35

போகவேண்டாம் என்று சொன்னால்
என்நயிந்தை ஆண்டவனே - இந்தப்
பூலோகத்தார் ஏசுவரே. 36

தடுத்து மறியாதே
என்நயிந்தை ஆண்டவனே - நீரும் ஒரு
தாமதங்கள் சொல்லாதே. 37

ஒன்றுக்கும் அஞ்சாதே
என்நயிந்தை ஆண்டவனே - நீரும்
போற்றி விடைதாரும் என்றாள் 38

ஐயன் கிருபையுண்டு
என்னுயிரே கண்மணியே
எனக்கு இணங்கும் நாயகியே - உனக்கு
ஆண்டவள் சித்தம் உண்டு. 39

போய் வாரும் என்று சொல்லி
வேலப்பணிக்கர் அவர்
பொல்லையுமோ கைகொடுத்தார், 40

ஓடிநடந்தல்லவே
அடியாள் பெண்பேதை நானும்
ஒரு நொடியில் வந்திடுவேன். 41

தாள் பணிந்து தெண்டனிட்டு
என் அஞ்சுகலை நஞ்சையுண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே
கஞ்சுவீரபத்திரனே - உன்
தஞ்சமெனவே நடந்தாள். 42

போறவழியே - என்
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே - ஒரு
புற்றெழுந்த நாகமொன்று 43

சீறிப்படமெடுக்க - என்
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே - என்
அன்பரே ஆதரவே - அரியாத்தை
பதைபதைத்து நடுங்கிநின்றாள். 44

நாடறியேன் காடறியேன்
நாகதம்பிரானே - நான்
அடியாள் பெண்பேதை - எனக்கு
நற்கிருபை தாருமென்றாள். 45

பணிக்கமார் எல்லோரும் - என்
ஏகபராபரனே நாகதம்பிரானாரே - அவர்
பயந்துவிட்டார் யானைகட்ட 46

பெண்பேதை கூட்டவென்று - என்
ஏகபராபரனே நாகதம்பிரானானே - நானும்
புறப்பட்டு வந்துவிட்டேன். 47

பத்தினியாள் நானாகில்
ஏகபராபரனே நாகதம்பிரானாரே - எனக்கு
நற்கிருபை தாருமென்றாள். 48

அரியாத்தைதான் தொழவே
அன்புடனே ஆனை கட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமுடன் வாரும் என்று - முன்னிருந்த
புற்றதனில் நாகம் அடங்கியதே. 49

கூடிநடந்தல்லவோ
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே - என்
அன்பரே ஆதரவே அவ
உள்ளந்தான் தொப்பளிக்க. 50

வாற பொழுதிலையே ஆனையது
மும்மதமும் தான் பொளிந்து
கைமடிந்துத் தான் குளறி - அரியாத்தை முன்பு
கொம்பன் வந்து நின்றதுவே. 51

யானையைக் கண்டவுடன்
வேலப்பணிக்கன் பெண்சாதி - அரியாத்தை அவ
கால் கை தடுமாறி நின்றாள். 52

பாலைமரம் வீரைமரம்
வேலப்பணிக்கன் பெண்சாதி - அரியாத்தை அவ
படுமரத்தோடு நின்றாவே. 53

காலாலே மண்ணை அள்ளி
தந்த விநாயகத்தீரனே
மால்மருகவேல் முருகா - உன்
தஞ்சம் என்று முன் போட்டாள். 54

கற்புடையாள் நான் ஆகில்
ஆனையடி ஆனையடி
ஆனைமறிகாறன் மகள்
ஆனைமயில் வாகனமே - உன்
கையைத்தான் நீட்டுமென்றாள். 55

அந்தமொழி கேட்டவுடன்
யானையடி யானையடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனைமறிகாறன் மகள்
ஆனைமயில் வாகனமே - அவ்
ஆனை கையைத்தான் நீட்டியதே. 56

கையாலே கைபிடித்து
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே - அதன்மேல்
கொடுமுத்தல்லவோ 57

காலிலிரு தேமலல்லோ
யானையடி யானையடி
யானைமறிகாறன் மகள்
ஆனைமயில் வாகனமே - உனது
கண் இரண்டும் நற்தேமல் அல்லோ 58

பொல்லை யெடுத்தல்லவோ
வேலப்பணிக்கர் பெண்சாதி - அவ
போட்டாளே ஆனைமுன்பு. 59

பொல்லை எடுத்து என்கையிலே
ஆனைமத யானையது
வேலப்பணிக்கர் பெண்சாதி
நாச்சன் அரியாத்தை கையில்
பொற்புடனே தான் கொடுக்க. 60

உன் காலைத்தா தா கந்தா
ஆனையடி ஆனையடி
ஆனைமறிகாறன் மகள்
ஆனைமயில் வாகனமே - நானும்
கனத்த வடம் போட்டு இறுக்க. 61

முன்னங்கால் தான் கிழம்பி
வேலப்பணிக்கன் பெண்சாதி
நாச்சன் அரியாத்தைக்கு
முடுக்கிவிட்டு நின்றதுவே. 62

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான்வாற் கயிறு எடுத்து
வேலப்பணிக்கர் பெண்சாதி – அவ
னைங்குளிரப் போட்டிறுக்கி. 63

முன்னங்கால் முடக்கு கந்தா
ஆனையடி ஆனையடி
ஆனைமதயா னையடி
ஆனைமறிகாறன் மகள்
ஆனைமயில் வாகனமே
நானடியாள் பெண்பேதை – உன்
குப்பத்தில் பாய்ந்தேற. 64

முளங் காலைத்தான் மடிக்க
வேலப்பணிக்கர் பெண்சாதி அரியாத்தை - அவ
முன்னேறின்று தோள்பிடிக்க 65

உக்கோட்டைத் தா கந்தா
ஆனையடி ஆனையடி
ஆனைமறிகாறன் மகள்
ஆனைமயில் வாகனமே
வேலப்பணிக்கன் பெண்சாதி – யானையிட
குப்பத்தில் எறினாளே 66

செவியைத்தா கந்தா
ஆனையடி ஆனையடி
யானை மதயானையடி
ஆனைமறிகாறன் மகள்
ஆனைமயில் வாகனமே
நானடியாள் பெண்பேதை
துறட்டிதனை போட்டிறுக்க. 67

செவியைத்தான் கொடுக்க
துறட்டிதனை போட்டிறுக்கி
வேலப்பணிக்கன் பெண்சாதி அரியாத்தை - அவ
செப்பினாள் ஓர் வசனம். 68

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிமறிகாறர் எல்லாம்
அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே
ஆனையயிராவதமே - அவை
வழிபார்த்து நிற்கிறார்கள். 69

நிற்கு மிடந்தனிலோ
என் அஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே
ஆனையயிராவதமே - நீரும்
நிமிசத்துடன் சொல்லுமென்றாள். 70

துறட்டிதனைப் போட்டிறுக்க
ஆனைமதயா னையது அரியாத்தைக்கு
அபயமெனக் குளறியதே. 71

குளறின சத்தமது சின்ன
வன்னியனார் பெண்சாதி இருக்குமந்த
அரண்மனையில் கேட்டதுவே. 72

யானைகட்டி வாறகதை
சின்ன வன்னியனார் பெண்சாதி
ஆச்சரியமாய் அறிந்து. 73

வன்னியனார் முன்புவந்து
என்நயிந்தை ஆண்டவனே
வேலப்பணிக்கர் பெண்சாதி
மச்சாள் அரியாத்தை - அவ
ஆனை கட்டி வாறாளே. 74

வேண்டும் வரிசைகளும்
என்நயித்தை ஆண்டவனே - அவருக்கு
மேலாப்பு போடுவியும். 75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தலுமோ போடுவித்தார்
எங்களை ஆளும் சின்னவன்னியனார் - நில
பாவாடை போடுவித்தார். 76

அன்னநடை சின்னஇடை
வேலப்பணிக்கர் பெண்சாதி அரியாத்தை - அவ
ஆனை கொண்டு வந்தாளே. 77

ஆனைதனைக் கொண்டு வந்து - என்
ஐஞ்சுகலை நஞ்சையுண்ட
அஞ்சாத ஐங்கரனே
அன்பரே ஆதரவே - நீரும்
அஞ்சுமால் நில்லுமென்றாள். 78

ஆத்தி மரத்துடனே
வேலப்பணிக்கர் பெண்சாதி - அந்த
யானைதனைக் கட்டி வைத்தாள். 79

யானை கட்டி வந்தபின்பு
எங்களையாளும் சின்ன வன்னியனார்
பெண்சாதி நாச்சன் அரியாத்தைக்கு - இருக்க
கதிரை போடுவித்தாள். 80

வெள்ளை விரும்பித்தாளே
எங்களையாளும் சின்னவன்னியனார்
பெண்சாதி அரியாத்தைதான் - இருக்க
மேலாம்பு போடுவித்தாள். 81

பெட்ட கத்தைதான் தீறந்து
எங்களையாளும் சின்ன வன்னியனார்
பெண்சாதி எடுத்துத்தர
பட்டு வற்கமதை. 82

கண்டியால் கொண்டு வந்த
எங்களையாளும் சின்னவன்னியனார் பெண்சாதி - ஒரு
கண்ணறைப்பட்டு மொன்று. 83

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டியால் கொண்டுவந்த
எங்களையாழும் சின்னவன்னியனார் பெண்சாதீ - அவ
தூயவர்னப் பட்டுமொன்று. 84

இந்தாரும் பட்டதென்று
எங்களை ஆளும் சின்னவன்னியனார் பெண்சாதீ
நாச்சன் அரியாத்தைக்கு
எடுத்துமல்லோ கைகொடுத்தாள். 85

கைநீட்டி வாங்காமல்
வேலப்பணிக்கர் பெண்சாதீ - மறு
காரியமாய்ச் சொல்லலுற்றாள் 86

மறந்துதான் போகாதே
எங்களையாளும் சின்னவன்னியனார் பெண்சாதீ
எங்களை அன்பாகக் காத்தருளும். 87

ஒன்றுக்கும் அஞ்சாதே
என் ஆசை அவுறுகமே
ஆசைமச்சாள் ஆதரவே - நான்
உள்ளமட்டும் காத்திடுவேன். 88

குற்றங்கள் வந்தாலும்
என் ஆசை அவுறுகமே
ஆசை மச்சாள் தோழியரே - நானும்
பொன் இறுப்பேன். 89

உலாந்தா மறியல் என்றால்
என் ஆசை அவுறுகமே
என் ஆசை மச்சாள் தோழியரே - நானும்
கூடவே நானிருப்பேன். 90

ஒன்றுக்கும் அஞ்சாதே - என்
ஆசைமச்சாள் தோழியரே
இந்தாரும் பட்டதென்றாள். 91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபரணம் தான் போட்டு
வேலப்பணிக்கன் பெண்சாதி
நாச்சன் அரியாத்தைக்கு
அணியச் சிலம்புமிட்டு. 92

வெற்றிலை பாக்குகளும்
எங்களையாளும் சின்னவன்னியனார் பெண்சாதி
நாச்சன் அரியாத்தைக்கு
வெள்ளித்தட்டில் தான் கொடுத்தான். 93

உள்ள வரிசையெல்லாம்
எங்களை ஆழும் சின்னவன்னியனார் பெண்சாதி
உகந்துமெல்லோ தான் கொடுத்தாள். 94

பதினெட்டு வரிசைகளும்
எங்களையாளும் சின்னவன்னியனார் பெண்சாதி
நாச்சன் அரியாத்தைக்குப்
பாங்குடனே அசை கொடுத்தாள். 95

பத்தையிலே பல்லி ஒன்று
என் ஆசை அவுறுகமே
ஆசை மச்சாள் தோழியரே - அது
தீரு கூறாகச் சொல்லுகுதே. 96

செத்தையிலே பல்லி ஒன்று
என் ஆசை அவுறுகமே
ஆசைமச்சாள் தோழியரே - அது
தீரு கூறாகச் சொல்லுகுதே. 97

சாகத்தான் போறேனோ
என் ஆசை அவுறுகமே
ஆசை மச்சாள் தோழியரே - நானும்
பிளைக்கத்தான் போறேனோ. 98

ஒன்றுக்கும் அஞ்சாதே
என் ஆசை அவுறுகமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசை மச்சாள் தோழியரே – நீரும்
வீடு போய் வாருமென்றார். 99

இப்பொழுதுதான் எழுப்பி
தன்னுடைய நாயகர்
வேலப்பணிக்கருக்கு - ஒரு
விண்ணப்பமாய்ச் சொல்லலுற்றேன். 100

ஆனைகட்டி நீற்குது காண்
என் நயிந்தை ஆண்டவனே - அதை
அவிழ்த்துநீர் கொடுத்து விடும். 101

விட்டோன் போறோன் காண்
என்நயிந்தை ஆண்டவனே - நீரும்
வீரைவாக வந்துவிடும். 102

நடந்து சுறுக்காயல்லோ
வேலப்பணிக்கன் பெண்சாதி - அவ
நடுவழியில் வருகையிலே. 103

வழியில் வருகையிலே
வேலப்பணிக்கர் பெண்சாதி
நாச்சன் அரியாத்தைக்கு
வந்ததே பெருந்துயரம். 104

கண்ணும் கடிக்குதையோ
என் ஆதி பராபரமே
ஆறுமுக வேலனே – என்னுடைய
கால்கள் மிகச் சோருதையோ. 105

கண்ணும் மயங்குதையோ
வேல் முருகா மால்மருகா
வேல் முருகா வேலோனே - எனக்குக்
கனத்த துயர் காணுதிப்போ. 106

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயும் வறளுகிதிப்போ
வல்லிபுர மாயோனே
நல்லநகர் வேலோனே - என்னுடைய
வாணாள் உருகுதிப்போ. 107

நடக்கவே கூடுதில்லை
நாரணரே காரணரே
நாகதம்பிரானாரே - எனக்கு
நடக்கவே கூடுதில்லை. 108

வீடுதான் போய்ச்சேர
மான் மகளார் வள்ளிபர துங்கா
வேல்முருகா குற துரங்கா - எனக்கு
வழியே தெரியவில்லை. 109

இடைவழியில் நான் சாக
என் ஏகபராபரனே
நாகதம்பிரானாரே - எனக்கு. 110

இறைவன் கட்டளையோ
என் பத்தாவு மில்லாமல்
ஐயோ பராபரனே
உன்னடியாள் பெண்பேதை - நான்
பாடுபட நீதியோ. 111

தஞ்சமொருவரில்லை
தற்பரனே பொறபரனே
அற்புதனே பொற்புதனே - எனக்குச்
சாக்கடன் தீர்ப்பாருமில்லை. 112

தள்ளாடித் தள்ளாடி
வேலப்பணிக்கர் பெண்சாதி
நாச்சன் அரியாத்தை . அவ
தம்பிரான் நன்மையினால் போய்ப் படுத்தாள். 113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை விரித்தல்லவோ
வேலப்பணிக்கர் பெண்சாதி – அவ
வெள்ளையின் மேல் பொல்லை வைத்தாள். 114

படுக்கைதனில் இருந்து
வேலப்பணிக்கர் பெண்சாதி - அவ
அரனே எனச் சாய்ந்தாளே. 115

சாய்ந்து துயரமுடன்
வேலப்பணிக்கர் பெண்சாதி - அவ
தலைவனைத் தான் நினைத்தாள். 116

என் காயம் முடியுமுன்னே
என் கண்ணாளா காதலனே
என் நயிந்தை ஆண்டவனே - நீரும்
கடுகிவந்து காணாயோ. 117

தரிக்க மனம் கூடுதில்லை
தலைவனே எந்தன் உயிர்
துடும்பித் தடுமாறுதிப்போ. 118

அவத்தம் வருகுதிப்போ
என்நயிந்தை ஆண்டவனே
ஐயோ பராபரனே - எனக்கு
அறிவுதடு மாறுதிப்போ. 119

ஆனைக்கும் அஞ்சாள் நான்
என்நயிந்தை ஆண்டவனே - நானுமொரு
அரிய புலிக் கஞ்சிவிட்டேன். 120

குதிரைக்கு மஞ்சாள் நான்
என்நயிந்தை ஆண்டவனே – நான் ஒரு
கொடிய புலிக்கஞ்சி விட்டேன். 121

மனையாள் படும் துயரம்
என் நயிந்தை ஆண்டவனே - நான்
மறுபேர்க்குச் செகல்லுவேனோ. 122

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவி படும்துயரம்
என் நயிந்தை ஆண்டவனே
ஐயோ பராபரனே - என்னைப்
பார்ப்பார் ஒருவரில்லை. 123

உனக்குச் சொல்லி அனுப்பவென்றால்
என் நயிந்தை ஆண்டவனே - எனக்கு ஒரு
தோழியரைக் காணேனே. 124

என்று சொல்லிப் பெண்பேதை
வேலப்பணிக்கன் பெண்சாதி - அவ
இருந்து புலம்பிடவே. 125

அரியாத்தை தான் புலம்பி
வன்னியனார்கள் வீட்டில் வேலப்பணிக்கர் - அவர்
வெகுசகுனம் கண்டாரே. 126

மெள்ள எழுந்திருந்து
எங்களையாளும் சின்னவன்னியனாருக்கு - ஒரு
விண்ணப்பம் சொல்லுவாராம். 127

கண்ணும் துடிக்குதிப்போ
எங்களையாளும் சின்னவன்னியனாரே - எனக்கு
கனத்தகுறி காணுதிப்போ. 128

மேலும் துடிக்குதிப்போ
எங்களையாளும் சின்னவன்னியனாரே - எனக்கு
இப்போ வெகுகுறிகள் காணுதிப்போ. 129

வீட்டுக்குச் செல்லவேணும்
எங்களை ஆளும் சின்னவன்னியானரே - எனக்கு
விடைதந்து அனுப்பிவிடும். 130

போய்வாரும் என்று சொல்லி
வேலப்பணிக்கருக்குச் சின்ன வன்னியனார்
போக விடைதான் கொடுத்தார். 131

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி நடந்தல்லவோ
வேலப்பணிக்கர் அவர்
ஒரு நொடியில் வீடு வந்தார். 132

பாவி படும்துயரம்
வேலப்பணிக்கர் அவர்
பரிவுடனே ஆண்டாரே. 133

பாவி படும் துயரம்
வேலப்பணிக்கர் அவர்
பரிவுடனே கண்டாரே. 134

என் கண்ணில் முளிக்கவென்றோ
என் நயிந்தை ஆண்டவனே
கண்ணாளா காதலனே - நீரும்
கண்ணெதிரே வந்தீரோ, 135

படும் துயரம் பார்க்கவென்றோ
என் நயிந்தை ஆண்டவனே - நீரும்
பதை பதைத்து வந்தீரோ. 136

நான்பட்டபாடு சொல்ல
என்நயிந்தை ஆண்டவனே - இந்த
நாடுலகம் கொள்ளாதே - 137

ஐந்து வயதிலையோ
என் நயிந்தை ஆண்டவனே - நீரும் என்னை
அன்பாய் மணம் முடித்தீர். 138

பதினாறு வயது மட்டும்
மனப்பட்சம் மறவாதிருந்தோம். 139

ஆயுள் முடியுதுகாண்
என் நயிந்தை ஆண்டவனே - என்
துன்பத்தை விட்டு விடும். 140

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்தி மரத்துடனே
என் நயிந்தை ஆண்டவனே - நானும்
அந்த யானை கட்டிவைத்தேன். 141

யானை அவிட்டீரோ
என் நயிந்தை ஆண்டவனே - ஆருமதை
அவிழ்க்கச் சொல்லி வந்தீரோ. 142

யானை அவிழ்க்கவில்லை
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - எனக்கு
அங்கமெல்லாம் பதைபதைத்து 143

மீண்டும் வருவேன் என்று
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - நானும்
விழம்பி வந்தேன் வன்னியற்கு. 144

உனக்கு வருத்த மென்ன
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - நானும்
உள்ளபடி சொல்லுமென்றார். 145

எனக்கு வருத்தமென்ன
என் நயிந்தை - அது
இன்னதென்று சொல்லறியேன் 146

கட்டோடே ஆனை நிற்கு
என்நயிந்தை ஆண்டவனே - அது
கயமிரதம் கொண்டுமே. 147

கட்டவுக்குப் பேருமில்லை
என் நயிந்தை ஆண்டவனே - அங்கே
ஒரு காரியம்போர் தானுமில்லை. 148

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தன் இறந்து விட்டால்
என் நயிந்தை ஆண்டவனே - எனக்குக்
கனபாவம் வந்திடுமே. 149

யானைதனை அவிழ்க்க
என் நயிந்தை ஆண்டவனே - என்னைப் போல்
யாருமொரு கற்புடையாள். 150

ஏழுசுருள் வெற்றிலையும்
என் நயிந்தை ஆண்டவனே
எடுத்துமவன் கைபிடித்து 151

கும்பிட்டுத் தெண்டனிட்டு
என் நயிந்தை ஆண்டவனே - அங்கே
கொண்டு கொம்பன் முன்புநின்றால். 152

அப்பல்லோ யானையது
என்நயிந்தை ஆண்டவனே - கந்தன்
அவிழ்க்க வல்லோ கால்கொடுப்பான். 153

கட்டை அவிழ்த்தாலும்
என்நயிந்தை ஆண்டவனே - கந்தன்
கருதித் தண்ணீர் தான் குடியான். 154

எப்படித்தானானாலும்
என்நயிந்தை ஆண்டவனே - எனக்
கேற்றபடி தான் நடக்கும். 155

நானும் பிறப்பதல்லால்
என்நயிந்தை ஆண்டவனே . நானும்
பிருப்பதொரு நாளுமில்லை. 156

என்றுபிருந்தது போல்
என்நயிந்தை ஆண்டவனே - நீரு
பிருப்பீர் மமைகிழ்வாய். 157

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியாள் இறந்தாளென்று
என்நயிந்தை ஆண்டவனே - நீரும்
அருந்துயரம் கொள்ளாதீர். 158

என்னைப்போல் கன்னியர்கள்
என்நயிந்தை ஆண்டவனே
எத்தனைபேர் தானிருப்பர். 159

என்னைப்போல் கற்புடையாள்
என்நயிந்தை ஆண்டவனே - இந்த
இலங்கையிலே மெத்த உண்டு. 160

அன்பாக நீர் இருப்பீர்
என்நயிந்தை ஆண்டவனே - நீரும்
அருந்துயரம் கொள்ளாதீர். 161

முகத்தோடை முகத்தை வைத்து
வேலப்பணிக்கர் அவர்
பொழிவர் சில வார்த்தை. 162

முந்திவந்த பூ எனக்கு
நான் எடுத்து நான் அணைத்து
நான் பூசும் சந்தனமே - அது
பேய் வாங்கிக் கொண்டிடுமே. 163

வலதுதுடை தாருமென்றாள்
என்நயிந்தை ஆண்டவனே - நானும்
மனமகிழ் வாய்ச் சாய்ந்துகொள்ள. 164

ஆருயிரே ஆதாரவே
ஆசைமட மாமயிலே - உன்னுடைய
துன்பமது தீருமட்டும். 165

வலதுதுடை மேல் கடக்க
வேலப்பணிக்கர் பெண்சாதி
அரியாத்தையுடைய சீவன் - ஒரு
வண்டாய்ப் பறந்ததுவே. 166

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலும் எரிந்தாப் போல்
வேலப்பணிக்கர் பெண்சாதி - அவ
கண்ணும் குளித்தாப் போல் 167

வாயால் நுரைதள்ளிடவே
வேலப்பணிக்கர் பெண்சாதி
அரியாத்தையுடைய வாணால் மடியுமுன்னே - வேலப்
(பணிக்கர்
மண்மேல் விழுந்தழுதார். '68

யானை கட்டப் போனடத்தே
ஆதரவே ஆருயிரே
ஆசைமட மாமயிலே - உனக்கு
ஐயம் காச்சி பட்டதுவே. 169

உனக்குப் பேய்தான் பிடித்ததுவே
என் பேர் பெரியநாயகியே
தீர் உடைய தேவியரே - உனக்குப்
பெல்லிப்பேய் விட்டினமோ- 170

கண்விழித்துப் பாரீரோ
என்னுயிரே கண்மணியே
எனக்கினங்கும் நாயகியே - நீரும்
என் முகத்தைப் பாரீரோ '71

ஆயிரம் யானைப்பணிக்கர்
என் ஆசைக்கிளியே
அரிய கயிலாயமே
பொன் தேன் பொழியாளே - உன்னை
அனுப்பிவிட்டார் என்னிடத்தில். 172

என்னமோ நானறியேன்
எனக்கின்பமுள்ள தேவியரே
பண்புபோலோவியமே
எதுதான் செய்வேனோ
என்னையவர் தானறிவார். 173

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகத்திலுள்ளவர்கள்
ஏதுக்குப் போதுமென்றார். 174

உந்தன் பசாசுகளை
உத்தமியே பத்தினியே
சித்திரமே தேவியரே - நானும்
ஒரு மிக்கத் தானனைப் பேனே. 175

அந்தகத்துக் கோவனத்தில்
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - நானும்
அறுதி என்று அனுப்பிவிட்டேன். 176

கோட்டிலே அல்லாதே
என் கோலக் குடிவாளே
வாலைப்புதுமயிலே - எனக்குச்
சினம் தராதே. 177

உன்னையுமே கொண்டவனார்
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - நானும்
உடனே அறி தேனென்றால். 178

உன்னுடனே கொண்டுவந்து
எனக்குற்ற துணைவியரே
வெற்றி மனைவியரே - நானும்
உடனே வதைத்தீடுவேன். 179

உன்னோடிப் பறப்பதல்லால்
என்குற்ற துணைவியரே
வெற்றி மனைவியரே - நானுமிந்த
ஊரிலிருப்பேனா. 180

நீயே என் பெண்சாதி யாயிருந்தால்
நான் எடுத்து நான் வளர்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பூசும் சந்தனமே - நீயே என்னைப்
பேணியே பாராமல். 181

கட்டையிலே உன்னை வைக்க
என் கண்மணியே காரிகையே
பெண்ணரசே பேதையரே - எனக்குக்
கருத்தோ தெரியாது. 182

பாடையிலே உன்னை வைக்க
என்னுயிரே கண்மணியே
பெண்ணரசே பேதையரே - எனக்குப்
பயனோ தெரியாது. 183

பட்சங்க ளுண்டானால்
அக்கினியைச் சுற்றி வந்தால்
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - எனக்
கன்பாய் இடம் தாரும். 184

வந்து நான் அப்போது
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - உனது
வலது கைநீட்டு மென்பேனே. 185

கை நீட்டித் தந்தல்லவோ
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - நானும்
கட்டையிலே சேர்ந்திடுவேன். 186

உத்தமியாள் நீரானால்
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - என்னை
ஒருமித்துக் கொண்டு செல்லும். 187

வந்து வளைத்தினமே
என்னுயிரே கண்மணியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கிணங்கும் நாயகியே - உன்னைக்
கட்டையிலே வைக்கவென்று. 188

என்கையை இறுக்கியல்லோ
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - என்னைக்
கட்டுகிறார் இப்பொழுது. 189

உன்னைக் கொண்டு நடக்கினமே
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - உனக்குக்
கொள்ளிவாய் மூட்டவென்றோ. 190

எல்லாச் சடங்குகளும்
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - உனக்குப்
பூ முடித்தார்கள். 191

என்னைக் கட்டியிங்கே போட்டினமே
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - உன்னோடு
கட்டையிலே சேராமல். 192

கற்புடையாள் நீரானால்
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - என்னுடைய
கையில் கட்டுத் தெறியாதோ. 193

கலங்கியழும் பொழுது
வேலப்பணிக்கருடைக் கைக்கட்டுத் தெறித்திட்டதே. 194

ஓட்டம் நடையாக வெல்லோ
வேலப்பணிக்கர் தன்னுடைய
உத்தமியைக் காணவென்று. 195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு கொண்டேனுந் தனை நான்
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - என்னுடைய
கவலையெல்லாம் தீர்த்தேனே. 196

கட்டை இடுக்கியல்லோ
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - உனக்குக்
கனத்த நெய் வார்த்தார்கள். 197

என்று சொல்லித் தானுமப்பே
வேலப்பணிக்கர் அவர்
ஏங்கிமுகம் வாடி
அக்கினியைச் சுற்றி வந்து
என்னுயிரே கண்மணியே
எனக்கிணங்கும் நாயகியே - நீரும்
அன்பாய்க் கையைத் தாருமென்றார். 198

செத்த பிணந்தானெழும்பி
வேலப்பணிக்கர் பெண்சாதி - அவ
திட்டமாய்க் கை கொடுத்தாள். 199

செத்து மடிந்தார்கள்
வேலப்பணிக்கரும் பெண்சாதியும் - அவ
சிவலோகம் சேர்ந்தார்கள். 200

பரமசிவன் பதியில
வேலப்பணிக்கரும் பெண்சாதியும் - அவை
பாங்குடனே போய்ச் சேர்ந்தார்கள். 201

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவுடமைச் சமுதாயத்தில் அரியாத்தை

**கலாநிதி பார்வதி கந்தசாமி**
*விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்*
*(மொழி பண்பாட்டுத்துறை)*

*(1983 ம் ஆண்டு வன்னிப் பிராந்திய தமிழாராச்சி மாகாநாட்டுச் சிறப்பு மலராகிய 'வன்னிமலர்' இல் இடம்பெற்ற "மதயானையை மடக்கிய வன்னிமாது" கட்டுரையின் ஒரு பகுதி)*

நிலவுடமைச்சமுதாயம் பெண்ணை ஒரு பொருளாகவே மதிக்கவில்லை. ஆணுக்கென்றொரு நீதி பெண்ணுக்கென்றொரு நீதி வகுத்தது; 'பெண் புத்தி' எனக் கூறிய பெண்ணைக் குடும் பத்தின் முக்கியத்துவத்திலிருந்து நீக்கியது. பெண் என்று சொல் லிடில் ஓர் பேயும் இரங்கும் என்று கூறிப் போந்தமையும் பெண்உற் பத்திக்கு அருகதையற்றவளாக ஆக்கிய நிலைமையை அடிப்படை யாகக் கொண்டது உற்பத்தியிற் பங்குபெறும் பெண் எந்த விதங் களிலும் ஆணுக்குச் சளைத்தவளில்லை உற்பத்தியிற் சமமானபங்கு உண்டெனில் ஏனைய விவகாரங்களிலும் பெண் சமஅந்தஸ்தை உடையவளே என்பது மரபுவழிச் சமுதாய அமைப்பிற் காணப்படும் உண்மை வேலப்பணிக்கர் ஒப்பாரியும் அரியாத்தை என்ற பெண். யானை பிடித்துக் கொடுத்த கதை கூறுவதன் மூலம் நிலவுடைமைச் சமுதாய நிலையிலும் ஓர் பெண் தாய்வழிச் சமுதாயத்தின் இயல்பு களை நினைவுபடுத்துவனவாகக் காட்டுகிறது. வேலப்பணிக்கர் ஒப்பாரி நிலவுடமைச் சமுதாயத்தின் தோற்றப்பாட்டின் பின்னர் எழுந்த கதை என்பது சின்னவன்னியனார் ஆட்சிமுறையிலிருந் தும் குடிமைமுறைகள் இருந்தமை பற்றிய விளக்கங்களிலிருந்து அறிய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வெற்றிலை பாக்குகளும் எங்களை ஆளும்
சின்னவன்னியனார் பெண்சாதி
நாசசன் அரியாத்தைக்கு வெள்ளித் தட்டில் தான்
கொடுத்தாள்'

'இருக்க மேலாப்பு போடுவித்தாள்'

பெண்கள் வெறும் பிள்ளைகளைப் பெறும் இயந்திரங்களாக ஆக்கப்பட்டமை இக்கதை நடந்த காலத்திற்கு முன்னரே இச்சமுதாயத்தில் நடந்து விட்டது என்பதனை, 'பெண்பேதை கட்டவென்று புறப்பட்டு வந்து விட்டேன்' என்ற அடி விளக்குகிறது. பெண்கள் 'பேதை' களாகக் கருதப்பட்ட நிலைமையும் பத்தினியாகப் பெண் இருக்கவேண்டும் என்ற கருத்தும் நிலவிய காலகட்டமே இக்கதை உருவாகிய காலமாகக் கருதவேண்டும். 'கற்புடையாள் நானாகில் உன் கையைத்தான் நீட்டு' 'அன்னநடை, சின்ன இடை வேலப்பணிக்கன் பெண்சாதி அவ ஆனை கொண்டு வந்தாளே' என்று கூறுவதன் மூலம் மெல்லிய இயல்புகளை உடையவரே பெண்கள்' எனச் சமூகத்தால் விதிகள் வகுக்கப்பட்ட பெண் ஒருத்தி சமூக விதிகளையும் மீறி ஆணுக்கு நிகர் என சாதித்து விடுவதைக் காணமுடிகிறது. 'பெண்பேதை துறட்டிதனைப் போட்டிறுக்க வன்னிமறிகாறார் எல்லாம் வழிபார்த்து நிற்கிறார்கள்.' என்ற அடிகள் மூலம் பெண்ணின் வீரம் விளக்கப்படுகின்றது.

அரியாத்தையின் துணிவு மதயானையின் பயங்கர கோலத்தை விளக்குவதன் மூலம் எமக்கு எடுத்துக்காட்டுகின்றது ஒப்பாரிப் பாடல்.

'வாற பொழுதிலையோ ஆனையது மும்மதமும் தான்
(பொழிந்து
கைமடித்துத் தான்குளறி அரியாத்தை முன்பு கொம்பன்
(வந்து நின்றதுவே'

பெரிய கயிறுகளைக் கொண்டு அரியாத்தை பயமின்றி யானையைக் கட்டி அதன் முதுகிலும் ஏறினாள்.

'உன் காலைத்தா கந்தா... நானும் கனத்தவடம்
(போட்டிறுக்கி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பொல்லை எடுத்தல்லோ வேலப்பணிக்கர் பெண்சாதி
நாச்சன் அரியாத்தை
கையிற் பொற்புடனே தான் கொடுக்க'
'மான் வார் எடுத்து வேலப்பணிக்கன் பெண்சாதி
அவ மனங்குளிரப் போட்டிறுக்கி'

அரியாத்தை மான்தோலில் செய்த வலிமையான கயிற்றையே மிகவும் தையிரியமாகவும், ஆறுதலாகவும் யானையிற் போட்டு இறுக்கிய செய்தி ஆச்சரியத்திக்குரியது. ஆடவரெல்லாரும் தம்மால் இயலாது என்று கைவிட்ட காரியத்தைப் பெண்ணான அரியாத்தை துணிவாக 'மனங்குளிரக்' கயிறுகளால் இறுக்கிக் கட்டிச் செய்தமை பெண்ணினத்திற்கு அரியாத்தைவிடும் சவாலாகவே உள்ளது.

தான் தனியாக ஒரு வீரதிலகம் அல்லது எனவும் தன்னைப் போல் பல பெண்கள் இலங்கை மாதா ஈன்றெடுத்திருப்பதாகவும் கூறுவதன் மூலம் பெண் சமூகத்தை ஒன்று சேர்க்கிறாள். அரியாத்தை! 'நானும் இறப்பதல்லால் நானும் இருப்பதொரு நாளும் இல்லை' என்று இறப்பு எல்லோருக்கும் நிகழும் ஒன்று எனவும் 'என்னைப்போல் கன்னியர்கள் எத்தனையோ தானிருப்பர்' எனவும் 'என்னைப்போல் கற்புடையாள் இந்த இலங்கையிலே மெத்தவுண்டு. எனவும் கூறி பெண்சமூகத்தை ஒருமுகப்படுத்தி' வலிமை பொருந்தியதாக ஆக்கவேண்டியதை உணர்த்துகின்றாள் வன்னிநாச்சியார் மான்மீயமும் ஏழு வன்னிமாதர் போத்துக்கீசருடன் போராடி மாண்டமையைக் கூறுகின்றது. வன்னி நாச்சிமாரின் போர்க் கோலத்திற்கான தூண்டல் நாச்சன் அரியாத்தையின் வீரச்செயல் பற்றிய கதையிலிருந்து தோன்றியிருக்கலாம் எனக்கருதுவதற்கு இடமுண்டு.

நீரு நயத் தக்க பண்பினிவள் நலனே
பொருநர்க்கல்லது பிறர்க்காகாதே

(புறநானூறு 342)

என்ற பாடலும் பெண்கள் வீரத்தைப் போற்றியமைக்கான ஆதாரத்தைத் தருகின்றது.

வன்னி மக்கள் காடுசார் பிரதேசங்களில் வாழ்வதால் கொடிய விலங்குகளுடன் போராட வேண்டியவர்களாவர். இதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரம் அவர்களுக்கு முக்கியமான ஓர் அம்சமாகக் காணப்பட்டது. இதனாற் பண்டைய வன்னியர் வீரக்கடவுளரையே பாடிப் போந்தனர் கிரேக்க காவியங்களும். வீரக்கடவுளரை வணங்கியமையைக் காட்டுகின்றன. ஐயன், ஆனைமுகன் வீரபத்திரர், நாகதம்பிரான் போன்ற கடவுளரை இறுதியில் வீரத்தாய் காளிக்குப் பொங்கலிட்டே யானையைப் பிடிக்கச் சென்றாள். வீரத்தைப் போற்றி வந்த மரபை அவர்கள் வழிபடும் தெய்வ வழிபாட்டிலிருந்தும் அறியலாம்.

பெண்ணின் முன்னேற்றத்தை ஆண்வழிச்சமுதாயம் விரும்பாது என்பதைக் காட்டவே அப் பெண்ணை நஞ்சு கொடுத்தோ அல்லது பெல்லிப்பேய் விட்டோ சாகடிக்கச் செய்யப்பட்டுள்ளது. தான் இறக்கும்போதும் 'உயிர்க்கருணை' என்னும் அன்புடமை கோட்பாடுபற்றிச் சிந்திக்கிறாள். அரியாத்தை கந்தன் என்ற யானையை அவிழ்த்து விடும்படி அவள் கூறியது அக்காலச் சமுதாயம் சித்திரவதையைச் செய்வதை விரும்பாதது என்பதைக் காட்டுகிறது.

இலக்கியங்களிலும், வாய்மொழி இலக்கியங்களிலுமுள்ள நீண்ட கதைப்பாடல்கள் சில சமூக நிகழ்ச்சிகளையும், வரலாற்று நிகழ்ச்சிகளையும் அடிப்படையாகக் கொண்டவை. இவற்றின் தலைவர்கள், தலைவியர் சோகமுடிவை எய்துவதே மரபு. குறிப்பாகத் தலைவரின் சோக முடிவைவிடத் தலைவியர் உடன்கட்டை மிக அவலமானது. வேலப்பணிக்கர் ஒப்பாரி தலைவியின் சோக முடிவைக் காட்டுவதுடன் தலைவன் இரங்கி அழுது புலம்பும் நிலை அவலமானதாகக் காணப்படுவதால் தலைவியின் சிறப்பே மேலோங்கி நிற்கின்றது.

**அடிக்குறிப்புகள்:-**

4. செ. மெற்றாஸ் மயில் (தொகுப்பாசிரியர்) 1990 வன்னிவள நாட்டுப் பாடல்கள், முல்லை இலக்கிய வட்ட வெளியீடு.

5. ஏஸ்கெல்ஸ் - குடும்பம். தனிச்சொத்து, அரசு ஆகிய வற்றின் தோற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' .. மேலும் அரியாத்தை அம்மையாரின் வழித்தோன்றல்கள் நாமென்று பெருமை பாராட்டும் வம்சாவழியினர் இன்றும் செம்மலை என்னுங் கிராமத்தில் உள்ளனர். அவர்களிடத்திலே அரியாத்தை அம்மையாரின் அடையாளச் சின்னங்கள் சில உள்ளன. அவையாவன கந்தையான நிலையில் உள்ள பட்டுச் சேலை ஒன்று, ''மைனாப்பூ'' என்று சொல்லப்படும் எறி சட்டி ஒன்று, அரையிடமாகக் கட்டுகின்ற முலிகை வளையங்களோடு கூடிய அரைப் பட்டி யொன்று, கொம்போடு கூடிய வார்க்கயிறு ஒன்று, அவர் கொண்டு சென்ற மந்திரக்கோல் ஒன்று என்பன இன்னும் அவர்களால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் இன்னும் பல பொருட்கள் சிதைந்துவிட்டன என்றும் அவர்கள் சொல்லுகின்றார்கள். இவற்றுள் சில இப்பொழுதும் குமுழமுனைக்கு வடக்கே அமைந்துள்ள 'ஆண்டான் குளத்தில்' நடைபெறும் ஐயனாருடைய மடைக்குக் கொண்டு செல்லப்பட்டு அம்மடையில் வைத்து வழிபட்டு வருவதும் வழக்கத்தில் உள்ளது.

வேலப்பணிக்கனும், அரியாத்தையாரும் குடியிருந்த இடம் அதிரியங்கோடு என்று சொல்லப்படுகின்ற இடமென்றும் இவ்விடம் குமுழமுனை, அளம்பில் செம்மலையாகிய கிராமங்களுக்கிடையில் அமைந்துள்ளது என்றும் சொல்வர். அரியாத்தை அவர்கள் சென்று ஆனைபிடித்த இடத்தை இன்றைக்கும் ஆனைபடுத்த கண்டல் என்றே அழைப்பதுண்டு. காட்டிலே கட்டாக் காலியாகத் திரிகின்ற முழுமாடுகளையோ, மதங்கொண்டு அட்டகாசம் செய்யும் யானைகளையோ சென்று பிடிப்பதை மாடுபடுத்தல், ஆனைபடுத்தல் என்று சொல்வது அன்று மாத்திரமல்ல இன்றும் உள்ள பெருவழக்காகும்....''

'வேழம்படுத்த வீராங்கனை' என்னும் கட்டுரையில் ஒருபகுதி - 1994

கட்டுரையாளர்:

அரியான் பொய்கை செல்லத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J / URUMPIRAI SANDROTHAYA VITHIYASALAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"ஆனையை அடக்கிய அரியாத்தை" வாழ்ந்த மண்ணான முல்லைத்தீவுப் பகுதிக்குச் சொந்தமான பாரம்பரிய ஆட்ட முறையில் அமைந்த "கோவலன் கூத்து" "கண்ணகை வழக்குரை" என்ற பெயரால் அழைக்கப்படும் ஆட்ட நாட்டுக்கூத்தில் "பாண்டியராசனாக" நாட்டுக்கூத்துக் கலைஞரும், இந்நூல் ஆசிரியருமான, செல்லையா மெற்றாஸ்மயில் இன் தோற்றம்.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINTED BY : SHARP GRAPHICS (PVT) LTD, COLOMBO - 12